விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 19 ஜுலைகஃ 5 இதழ் 170
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3-8-84

கொழும்பு முகாம்களிலுள்ள அகதிகளை

## மட்டக்களப்பில் குடியமர்த்த

### 'இராசு'வுக்கு ஜனாதிபதி அங்கீகாரம்

(கொழும்பு)

இரத்மலானை இந்துக்கல்லூரியிலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் கடந்த ஒரு வருடமாக தங்கியிருக்கும் அகதிகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் குடியமர்த்துவதற்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இந்த அகதிகளுக்கு வீடு கட்ட, விவசாயம் செய்வதற்கு காணிவழங்குதல், நிலப் பிரச்னை ஆகியன தொடர்பாக அமைச்சர் திரு. செ. இராசதுரை நேற்று ஜனாதிபதியை சந்தித்து விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்தே அமைச்சரின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இம்மாத முடிவுக்குள் மேற்படி அகதிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் குடியமர்த்தப் படுவார்கள் என்று நம்பப்படுகிறது.

இரண்டு அகதிகள் முகாம்களிலும் சுமார் இரண்டாயிரம் அகதிகள் உள்ளனர்.

# கடல் கண்காணிப்பு வலயம்

# கிழக்குக்கும் விஸ்தரிப்பு

(கொழும்பு)

பிரிட்டனின் தொழிற்கட்சி எம். பி. செல்வி பூத்ரோய் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

இவர் வெளிநாட்டமைச்சர் ஜனப் ஷாகுல் ஹமீத்தை சந்தித்து உரையாடினர். (வெ)

## அமைச்சர் லலித் தகவல்

(திருகோணமலை)

**''வடபகுதியில் போடப்பட்டுள்ள கடல்கண்காணிப்பு வலயம், விரைவில் கிழக்குப் பிராந்தியத்துக்கும் விஸ்தரிக்கப்படும்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.**

நேற்றுக்காலை திருகோணமலை கடற்படைத் தளத்தில் புதிதாகப் பயிற்சி பெற்று வெளியேறும் கடற்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை அமைச்சர் ஏற்றுக் கொண்டு புதிய வீரர்கள் மத்தியில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர் அத்துலத்முதலி தொடர்ந்து கூறியதாவது.

நாட்டின் பாதுகாப்பு, இன ஒற்றுமை, அமைதி ஆகிய மூன்றினையும் பாதுகாக்க நாம் பாடுபடவேண்டும்.

''யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் போடப்பட்டுள்ள கடல் கண்காணிப்பு வலயம் கிழக்கு மாகாணம் வரை விரைவில் விஸ்தரிக்கப்படும். அதன் பின்னர் இலங்கைக் கடற்படையினரின் பலம் மேலும் அதிகரிக்கப்படும்.

''கடற்படை வீரர்கள் நாட்டுக்கு விசுவாசமாகப் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும்'' என்றார்.

பயிற்சி முடித்து வெளியேறிய புதிய கடற்படை வீரர்களின் இவ்வைபத்தைத் தொடர்ந்து அமைச்சர் திரு. அத்துலத்முதலி திருகோணமலைக் கடற்படைத்தளத்தில், புதிய கடற்படை பயிற்சி நிலையக் கட்டிடமொன்றைத் திறந்து வைத்தார்.

மூன்று மாடிகளைக்கொண்ட இக் கட்டிடத்தை வர்த்தகக் கப்பல்துறை அமைச்சு சுமார் 120 லட்சம் ரூபாசெலவில் இலங்கைக் கடற்படைக்கு நிர்மாணித்துக் கொடுத்துள்ளது.

முப்படை உயர் அதிகாரிகள் உட்பட இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தலைவர் திரு. லயனல் பெர்ணண்டோ

(8-ம் பக்கம் பார்க்க)

✲ யாழ். மாணவன்

## தினேஷ் உயிர்காக்க உதவிக்கரம் நீட்டுங்கள்!

[நமது நிருபர்]

யாழ், மத்திய கல்லூரி மாணவன் தினேஷ் சோமசுந்தரம் (14 வயது) உயிர்காக்க, உங்களின் உதவி உடனடியாகத் தேவைப்பட்டுள்ளது!

யாழ்ப்பாணம் சப்பல் வீதியைச் சேர்ந்த தினேஷ், யாழ். மத்திய கல்லூரியின் எட்டாம் வகுப்பு மாணவனாகும்.

சிறுநீரகம் இரண்டும் இயங்க முடியாத நிலையில், கொழும்பு பெரியாஸ்பத்திரியில் செயற்கைச் சிறுநீரகம் பொருத்தப்பட்டு, சிகிச்சைக்கு உட்படுத்

(8-ம் பக்கம் பார்க்க)

பிரெஞ்சு விமானக் கடத்தல்:

## கடத்தல்காரர்கள் சரணடைந்தனர்!

(தெஹ்ரான்)

பிரெஞ்சுவிமானத்தை திசை திருப்பியவர்கள் சரணடைந்துள்ளனர் கடத்தல்காரர்கள் விமானத்திலிருந்த பயணிகளையும், சிப்பந்திகளையும் விடுவித்த பின்னர் தெஹ்ரானில் பாதுகாப்பு அதிகாரிகளிடம் சரணடைந்தனர்.

இவர்கள் சரணடைவதற்கு முன்னர் தெஹ்ரான் விமான

(8-ம் பக்கம் பார்க்க)

## புதிய நியமனம் பெற்ற இசை, நடன ஆசிரியர்கள்

(கொழும்பு)

இசை ஆசிரியர்களாக நியமனம் பெற்ற 72பேரின் பெயர் விபரம், முன்பகுதியாகவும், இரண்டாம் பகுதியாகவும் வெளியிடப்பட்டது. மேலும் பதினைந்து இசை ஆசியர்களின் விபரமும் நடன ஆசிரியர்களின் விபரமும் இங்கே

(8ம் பக்கம் பார்க்க)

இந்திய பாதுகாப்பு அமைச்சராக

## சவான் நியமனம்

புதுடில்லி, ஆக. 2

இந்திய பாதுகாப்பு அமைச்சராக திரு. வை.பி.சவான் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட முன்னர் இலாகாப் பொறுப்புகளற்ற அமைச்சராகப் பதவி வகித்தார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர்- வெங்கட்ராமன் உபஜனாதிபதிதேர்தலில் போட்டியிடும் பொருட்டு பாதுகாப்பு அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். (வெ)

இந்திய உபஜனாதிபதி தேர்தல்:

## வெங்கட்ராமன் வேட்புமனு தாக்கல்

(புதுடில்லி)

இந்திய உப ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளாராகமுன்னாள் பாதுகாப்பமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

அவரின் முதல் தொகுதி தேர்தல் மனுவை பிரதமர் இந்திராகாந்தி மற்றும் சக அமைச்சர்கள் தாக்கல் செய்தார்கள். ஏனைய இரண்டு தொகுதி மனுக்களையும் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்தனர். அ. தி. மு. கவைச் சேர்ந்த ராஜ்ய சபா உறுப்பினர் மோகனரங்கமும் வெங்கட்ராமனின் பெயரை முன்மொழிந்தவர்களில் ஒருவராவர்.

உபஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் இந்திய குடியரசு கட்சியைச் சேர்ந்த பி. சி. கான்பரே

(8-ம் பக்கம் பார்க்க

## ஆகஸ்ட் 21ல் சிங்கராயர் வழக்கு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் வணபிதா சிங்கராயர், திருமதி நிர்மலா நித்தியானந்தன் ஆகியோருக்கெதிராக தொடரப்பட்ட வழக்கை இம்மாதம் 21ம் திகதி விசாரணைக்கெடுக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு டி. ஜே. ஜயலத் பணித்துள்ளார்.

திருமதி நிர்மலா நித்தியானந்தன் மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பிச் சென்றது தெரிந்ததே.

## கூட்டணி விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆயுதப்படையினரால் தமிழ்மக்கள் கைதுசெய்யப்படுவது, தாக்குதலுக்குள்ளாவது மற்றும் காணமல் போவது போன்ற விபரங்களை தமிழர் விடுதலைக்கூட்டணி சேகரித்து வருகிறது.

இதுசம்பந்தமான சுற்று நிருபங்களை தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகச் செயலாளர் கூட்டணியின் பொதுச்சபை உறுப்பினர்களுக்கும், கிளைக்குழு உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (மா)

பொதுமக்களுக்கோர் நற்செய்தி!

விஜிதா றவல்ஸ்
(VIJITHA TRAVELS)

யாழ். / தலைமன்னர்
தினசரி சேவை

உறங்கல் இருக்கை ஆசனங்கள் கொண்ட நவீன வசதிகளுடன் செயலாற்றப்படுகிறது.

இச்சேவை 1–8–84 தொடக்கம்

இந்திய கப்பல் பிரயாணிகளின் வசதிக்கேற்ப ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

புறப்படும் நேரம்:- நண்பகல் 1-00 மணி.
யாழ். பஸ் நிலையம்.
(வைரவர் கோவிலடி)

ஆசனங்கள் பதிவு செய்யும் இடம்:-

1. வி. வடிவேல் அன் சன்ஸ்
142, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24359

2. விஜிதா மோட்டோஸ்
43, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
தோலைபேசி: 23735

விஜிதா மோட்டோஸ்
43. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23735

1179

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

3 மாத Hyline 200 முட்டைக் கோழிகள் ஊசிகள் போடப்பட்டன. Dr. சச்சிதானந்தம், A. I. C. S., கால்நடை சிகிச்சை நிலையம், 89, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1173

நல்ல நிலைமையில் உள்ள Pegeot Car 203 இல. 1 ஸ்ரீ 1569 விற்பனைக்குண்டு. விபரம்: S. பஞ்சலிங்கம் சட்டத்தரணி, புலோலி தெற்கு, மந்திகை. 1133

நல்ல நிலையில் தனி ஒருவர் பாவிப்பிலுள்ள கேம்பிறிஜ் A 50 1 ஸ்ரீ இலச்கத் தொடர்புடைய கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு T. மரியதாஸ் C/o எஸ். தாமோதரம்பிள்ளை, மாங்கொல்லை வீதி (சீமெந்துத் தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள வீதி), காங்கேசன்துறை. 1192

North town Chicks. Cross Broilers-4-50. சேவல் குஞ்சு-1-65, பேட்டுக்குஞ்சு வெள்ளை, சிவப்பு-8-75. நாலு நாள், கிழமைக்குஞ்சுகளும் ஓடருக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: ராதாகிஷ்ணுஸ், 392, நாவலர் வீதி, கயிலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம். 1190

## தேவை

யாழ். நகர் ஸ்ரான்லி வீதியிலுள்ள வர்த்தக நிறுவனமொன்றிற்கு பி. வி. சி. உபகரணங்கள் செய்வதில் அனுபவம் வாய்ந்த ஒருவர் உடன் தேவை. தகுதியானவர் மாதச் சம்பளமாக ரூபா 2000/- வரை எதிர்பார்க்கலாம், நாட்சம்பளமாகவோ, மாதச் சம்பளமாகவோ, நேரில் பேசித்தீர்மானிக்கலாம். கிராமசேவகரின் நற்சாட்சிப் பத்திரத்துடன் 8- 8- 84 க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்:-1166, C/o. ஈழநாடு. (1166)

விற்பனை செய்வதற்குச் சகலவித பொருட்களும் தேவை, அவை புதியனவாயினும் அல்லது பழையவையாயினும் விபரங்களுக்கு முத்திரைகவருடன் விண்ணப்பிக்கவும்: கார்த்திகேசு ஏலவிற்பனை நிலையம் கோப்பாய். 1188

வாடகைக்கு வீடு ஒன்று யாழ்ப்பாணம் ஒரு மைல் எல்லைக்குள் தேவைப்படுகின்றது. நான்கு அறை கொண்டதாகவும், மின்சாரம், பைப் வசதியுள்ளதாகவும் இருக்க வேண்டும். தொடர்புகொள்ளவும்: சிப்சைட், 7-8, நவீன சந்தை, (உட்புறம்), யாழ்ப்பாணம். 1177

கொழும்பில் பயிற்சிபெறவும் பின் உடைகள் ஏற்றுமதி செய்யும் தையல் நிலயத்தை பொறுப்பேற்று நடத்தவும் திறமையுள்ள இளம்பெண் தேவை. சகல விபரங்களையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 1185, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1185

## பயிற்சி

விடுமுறை Badminton வகுப்புக்கள் ஆகஸ்ட் 6ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும். Children's Badminton Court, றக்கா றேட், யாழ்ப்பாணம். 1148

## தவறிவிட்டது

1-8-84 அன்று நண்பகல் 12-45 மணிக்கும் 1-00 மணிக்குமிடையில் நல்லூர் கோவில் வீதியில் (நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும் கோண்டாவில் இருபாலை வீதிச் சந்திக்கும் இடையில்) நீலநிற அலுமினிய கைபிடி பொருத்தப்பட்ட Elasto றெக்சின் பாக் சயிக்கிளில் இருந்து தவறிவிட்டது. அடையாள அட்டை, இலங்கைவங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம், கல்குலேற்றர், உட்பட சில முக்கிய பத்திரங்கள் தவறிவிட்டன. இதனை ஒப்படைப்பவர்கட்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். எஸ். விக்கினராசா, யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்க மின்தறி நிலயம், கோண்டாவில். தொலைபேசி இல: 22474. (1195)

## வகுப்புக்கள்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுக்குரிய வெல்டிங், வயரிங், மோட்டர் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன. J.E.C, 33, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம். 1167

Logic-சுதாகர், Economics-சின்னத்தம்பி, Accounts-மரியதாஸ், Commerce - ஜெயராமன், 85. 86-ம் ஆண்டுகளுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. 'New Becon,' (ஸ்ரீதர் முன்பாக) யாழ்ப்பாணம். 1171

## பிறந்த நாள் வாழ்த்து



யாழ்ப்பாணம் காமால் லேனைச் சேர்ந்த M. மன்சூர் றுபிளு தம்பதிகளின் புதல்வி சுல்பியின் முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள். வாழ்த்துபவர்கள் வாப்பா உம்மா, தஸ்லீம், சப்ரின் சபினு, ரபினு, உம்மம்மா வாப்பச்சி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சிமார், மற்றும் உற்ருர், உறவினர்கள் அல்லாஹ்வின் அருளினல் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறுர்கள். 1186

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றசுப்பையா சிவசுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

சுப்பையா சிவசுப்பிரமணியம் கைம்பெண் பூமலர் அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 206

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3 ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 3-ந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

என்னுல் வரையப்பட்டது

செ. இராமலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி,

(1151)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

கதிரிப்பாய் அச்சுவேலியைச் சேர்ந்த இராமுப்பிள்ளை செல்லத்துரை சுப்பிரமணியம் என்பவரின் மரணசாதன மற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/211

செல்லத்துரை சுப்பிரமணியம் கைம்பெண் சிவஞானவதி, கதிரிப்பாய், அச்சுவேலி.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 31-ந் திகதி,

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

தயாரித்தவர்;
க. வ. பாலசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(1176)

## பஸ் - மோட்டார் - சைக்கிள் விபத்து: ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் நேற்றுக் காலை நடந்த பஸ்-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிலில் வந்த 32 வயதான உரும்பிராயைச் சேர்ந்த அப்பாத்துரை மகாலிங்கம் பலியானுர்.

யாழ்.பதில் நீதவான் எஸ் அமிர்தலிங்கம் நேற்று மரண விசாரணையை நடத்திஞர்.

வ.போ.ச.பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி நோக்கிச் சென்ற தாகவும் மோடார்சைக்கிள் யாழ்ப்பாணம் நோக்கி வந்ததாகவும் உரும்பிராய் இந்துக்கல்லூரியடியில் விபத்து ஏற்பட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

பிரேதபரிசோதனை செய்யுமாறு சட்டவைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது, (க)

## முதலிலே ஆக்கப்படும் முற்ருன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் வண்ணுர் பண்ணை மேற்கைச்சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் பிள்ளை பத்மநாதன் என்பவரினது மரணசாதன விடயததில்,

மரணமெய்தியவர்

யாழ்ப்பாணம் வண்ணுர் பண்ணை மேற்கு ஐயனுர் கோவில் ரேட்டைச் சேர்ந்த ஆறுமுகம்பிள்ளை பத்மநாதன் கைம்பெண் இராமநாயகி.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல: 3804

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 19ம் நாளன்று, அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்ருன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு.குலசிங்கம்
பதிவாளர்

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 19ம் நாளன்று தேதியிடப்பட்டது.

என்னுல் வரையப்பட்டது
இ.இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி
1149

## இசைத்துறையில் தெரிவானுர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த செல்வி.நிருபா சோமசுந்தரம், சென்னை பல்கலைக்கழக பிரிவு ராணி மேரி கல்லூரியில் இசைத்துறையில் பி.ஏ பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு இவ் வருடம் தெரிவாகி உள்ளார். இவர் சென்னை மியூசிக் போதஞசிரியை வீணை ஆர்.ஜெயலட்சுமியின் சிஷ்யையும் யாழ்.பல்கலைகழக நுண்கலைப் பிரிவு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியும் கல்கமுவை பட்டின சபை முன்னுள் தலைவர் தொழில் அதிபர் என் கே சோமசுந்தரம் தம்பதிகளின் புதல்வியும் ஆவார்

## காணி விற்பனைக்கு

இராஜசிங்க வளவு (3 பரப்பு; கிணறு)
(சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்த அதிகார் செல்லமுத்து வீதி வளவு)மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.
கோரப்பட்ட இறுதி விலை; பரப்பு ரூபா 75,000/-
10-08-84க்கு முன் தொடர்பு கொள்க.
விளம்பர இல. 1191, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(1191)

## எலக்றிக்கல் வயரிங் பயிற்சி

(செய்முறை பயிற்சியுடன்)
2 மாதம்
ஆரம்பம்: 03–08–84

**இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னெலொஜி,**
11 B, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [1132]

## பெண் தட்டெழுத்தாளர் ஆங்கிலம்/லிகிதர்

மேற்படி வேலை காலியாகவுள்ளது.
விண்ணப்பகாரர் அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகளுடன் விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவும்.
விண்ணப்ப திகதி முடிவு 7-8-84.
வயது: 25 முதல் 35 வரை.
ஆங்கில அனுபவம், லிகிதர் வேலை ஆகியனவற்றில் வேறு ஸ்தாபனங்களில் வேலைசெய்த அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி;

தலைவர்
யாழ்.மாவட்ட தனியார் பேருந்து இயக்குநர் சங்கம்,
காங்கேசன்துறை வீதி, சுன்னுகம். 1184

# இந்திரா காங்கிரஸ் உபஜனாதிபதி வேட்பாளராக வெங்கட்ராமன்!

## தமிழக அரசு மகிழ்ச்சி!

புதுடில்லி, ஆக. 2,

**இந்திய உபஜனாதிபதி தெரிவுக்கான ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி வேட்பாளராக பாதுகாப்பமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் நிறுத்தப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து இவர் நேற்று தமது பாதுகாப்பமைச்சர்பதவியைத் துறந்தார்.**

திரு. ஆர். வெங்கட்ராமனை இந்திய உப ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக இந்திரா காங்கிரஸ்கட்சி சார்பில் நிறுத்துவதென நேற்று இக்கட்சி ஏகமனதாக முடிவுசெய்தது.

நாளை திரு. வெங்கட்ராமன் தமது வேட்பாளர் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வார். ஆளுங் கட்சியில் சிரேஷ்ட அமைச்சராகவும், அனுபவம் மிக்க அரசியல் வாதியாகவும் இவர் விளங்குகின்றார்.

பாதுகாப்பமைச்சராக இரு வருடங்களுக்கு முன்னரே திரு. வெங்கட்ராமன் நியமிக்கப்பட்டார். அதற்கு முன்னர் அவர் நிதியமைச்சராகப் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. வெங்கட்ராமன் மத்திய அரசில் தமிழ்நாட்டின் தென்சென்னைத் தொகுதியை லோக்சபாவில் பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்.

இந்தியப் பாராளுமன்றில் லோக்சபா, ராஜ்சபா ஆகிய இரு பிரதான சபைகளிலும் செல்வாக்கு மிக்க ஒருவராக இருக்கும் இவர், உபஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவது பெரும்பாலும் சாத்தியமாகும்

தமிழ்நாடு மாநில அரசாங்கம், திரு. வெங்கட்ராமன் இந்திராகாங்கிரஸ் உபஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. முதலமைச்சர் எம். ஜி. ஆர். தமிழ் நாட்டைச்சேர்ந்த தமிழர் ஒருவர் உபஜனாதிபதியாவதில் மத்திய அரசு அக்கறைகாட்ட வேண்டும் என்று அண்மையில் தெரிவித்திருந்தார். (கி)

# கடத்தப்பட்ட பிரான்ஸ் விமானத்தை தகர்க்கப்போவதாக எச்சரிக்கை!

## கடத்தல்காரர் ஈரானிய தீவிரவாதிகள்

தெஹ்ரான், ஆக. 2

64 பேருடன் ஈரானுக்கு கடத்தப்பட்ட பிரான்ஸ் 'போயிங்' விமானத்தை குண்டு வைத்து தகர்க்கப் போவதாக கடத்தல்காரர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து பாரிஸ்நோக்கி சென்றுகொண்டிருந்த போது இந்த விமானத்தைக் கடத்தியவர்கள் மூவரும் ஈரானின் தீவிரவாத முஸ்லிம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டது.

சைப்பிரஸில் லனகா விமானநிலையத்தில் தரையிறங்கிய இந்தவிமானம் பின்னர் தெஹ்ரானுக்கு கடத்தல் காரர்களால் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

முன்னாள் ஈரானிய பிரதமர் பக்தியாரை பிரான்ஸில் வைத்து கொலை செய்ததாக கைதுசெய்யப்பட்டுள்ள அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும் விடுதலை செய்யப்படாவிட்டால் விமானத்தை குண்டு வைத்து தகர்க்கப் போவதாகவும் கடத்தல்காரர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இதேவேளை ஈரானிய அதிகாரிகள் கடத்தல் காரர்களுடன் தொடர்ந்து சமரசப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

# அகதிகள் குடும்பத்துக்கு ரூ, 11,000 நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

கைதடி, குருநகர் அகதி முகாம்களைவிட்டு வெளியேறும் குடும்பத்திற்கு சுமார் 11, 000 ரூபாவரை நிதியுதவி வழங்கப்படும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

சொந்தவீடு திருத்துவதற்கு அல்லது, புதுவீடுவாங்குவதற்கு, அல்லது புதுவீடு கட்டுவதற்கு, அல்லது 5 வருடத்திற்குமேல், குத்தகைவீடு எடுப்பதற்கு 6 000 ரூபாவும் வாடகைக்கு முற்பணமாக 2000 ரூபாவரையும் வியாபாரம், தொழில் ஆரம்பிக்க 3000 ரூபா வரைவழங்கப்படும்.

சமையலறை பாத்திரங்கள்மற்றும் உடைக்கு 500 ரூபா வழங்கப்படும், உணவுக்கு வயதுவந்தவர்களுக்கு 150 ரூபாவும், 15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 75 ரூபாவும் வழங்கப்படும்.

இந்த அறிவித்தல் அத்தியாவசிய சேவைஆணையாளரினால் சகல அகதிமுகாம்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது,

# வடமாகாண கல்லூரிகளில் விஞ்ஞான தினம்

(புலோலி)

இலங்கை விஞ்ஞான சங்க விஞ்ஞான அறிவியல் பரப்புக்குழு வடமாகாண கல்லூரி விஞ்ஞான மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்து முகமாக விஞ்ஞான தினத்தினை நடாத்தவுள்ளது.

இவ்விஞ்ஞான தினத்திலே விஞ்ஞானக் கருத்தரங்குகள் விஞ்ஞான பேச்சுப்போட்டிகள் விஞ்ஞான வினாப்போட்டிகள் என்பன இடம் பெறவுள்ளன. இவ்விஞ்ஞான தினம் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம், மன்னார், வவனியா, முல்லைத்தீவு ஆகிய கல்விப் பிராந்தியங்களில் நடாத்தப்படவுள்ளன.

செப்டெம்பர் மாதம் 10-ம் திகதி யாழ். கல்விப் பிராந்தியத்தில் சாவகச்சேரி இந்து கல்லூரியிலும் மன்னார் கல்விப் பிராந்தியத்தில் 11-ம் திகதி மன்னார் பரிசேவியர் பெண்கள் கல்லூரியிலும், வவனியா கல்விப் பிராந்தியத்தில் 12-ம் திகதி வவனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலயத்திலும் முல்லைத்தீவு கிளிநொச்சி கல்விப் பிராந்தியத்திலும், 3-ம் திகதி றாளியவளை வித்தியானந்தா கல்லூரியிலும் இவ்விஞ்ஞான தினம் நடைபெறும்.

விஞ்ஞான வினாப்போட்டியின் இறுதிப்போட்டி வவனியா மத்திய மகாவித்தியாலயத்தில் செப்டம்பர்மாதம் 14-ம் திகதி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றியடைந்த குழுவிலுள்ள மாணவர்களுக்குத் தலா 100 ரூபா வீதமாக உடனே அன்பளிப்பு வழங்கப்படும். அவர்களுக்குரிய சான்றிதழ்களும், அவர்கள் கல்லூரிகளுக்கான கேடயமும் கொழும்பில் நடைபெறவுள்ள இலங்கை விஞ்ஞான சங்கத்தினுடைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதமவிருந்தினரால் வழங்கப்படும்.

இவ்விஞ்ஞானப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விஞ்ஞான மாணவர்கள் கல்லூரி அதிபர்களின் சிபார்சுகளுடன் செப்டம்பர் மாதம் 1-ம் திகதிக்கு முன்னதாக பேராசிரியர் வீ. கே கணேசலிங்கம், பேராசிரியர் வளவு, கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# மே.இந்தியதீவுகள் வெற்றி

(மஞ்செஸ்டர்)

மே. இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே மஞ்சுசெஸ்டரில் நடைபெற்ற 4-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் மே. இந்திய தீவுகள் அணி ஒரு இன்னிங்ஸ் 64 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது,

முதலில் துடுப்பெடுத்தாடிய மே. இந்திய தீவுகள் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 500 ஓட்டங்களை எடுத்தது, ஆரம்ப ஆட்டக்காரர் கோல்டன் கிறீன்விச் 223 ஓட்டங்களையும், டியோன் 101 ஓட்டங்களையும், வின்சன்ட் டேவிட் 77 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 280 ஓட்டங்களை எடுத்தது. அலன் லாம் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களை எடுத்தார். தொடர்ந்து 2-வது இன்னிங்ஸில் ஆடிய இங்கிலாந்து மொத்தம் 156 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. இதில் காப்டன் கவர் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களை எடுத்தார்.

இப்போட்டியில் மே. இந்திய வீரர் கோல்டன் கிறீன்விச்சுக்கு சிறந்த வீரருக்கான பரிசு கிடைத்தது.

இதுவரை நடைபெற்ற 4 போட்டியிலும் மே. இந்தியத் தீவுகளே வெற்றி பெற்றுள்ளது. இறுதி டெஸ்ட் இம்மாதம் 9 திகதி 'ஓவல்' மைதானத்தில் ஆரம்பமாகும். (சூ)

# "இளைஞர் சமுதாயத்திற்கு லயன்ஸ் கழகம் ஆற்றும் சேவை"

[கிளிநொச்சி]

"விரக்தி நிலையில் வாழுகின்ற இன்றைய இளைஞர் சமுதாயத்தின் நல்வாழ்விற்காக பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள கரைச்சி லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது. இதற்கென பல ஆக்கபூர்வ திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம். இன்றைய இளைஞர்கள்தான் நாட்டின்முதுகெலும்பு ஆவார்கள், இவர்களது சக்திகள் நல்ல முறையில் பயன்படுத்தப்படவேண்டும்,

இவ்வாறு கரைச்சி லயன்ஸ் கழகமும் பரந்தன் இளைஞர் வட்டமும் இணைந்துமேற்கொண்ட சிரமதான வைபவத்திற்கு தலைமைதாங்கி உரையாற்றுகையில் கரைச்சி லயன்ஸ் கழகத் தலைவர் திரு. ஜோசப் நாயகம் குறிப்பிட்டார். பரந்தன் குமாரபுரம் துரிசடி வீதி இவ் வைபவத்தின் போது சிரமதான மூலம் சீர் செய்யப்பட்டது

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் லயன் என் ஜெயநாதன் வைபவத்தின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட நூற்றுக்கு மேற்பட்டோர் இச் சிரமதானத்தில் பங்கு கொண்டிருந்தனர்.

## ★ ஒலிம்பிக்

### பதக்கப் பட்டியல்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 18 | 9 | 2 |
| சீனு | 6 | 3 | 3 |
| இத்தாலி | 4 | 1 | 0 |
| கனடா | 3 | 3 | 0 |
| மே. ஜேர்மனி | 3 | 1 | 3 |
| பிரிட்டன் | 1 | 0 | 2 |
| ஆஸ்திரேலியா | 0 | 1 | 4 |
| பிரான்ஸ் | 0 | 1 | 1 |
| பிரேஸில் | 0 | 1 | 0 |
| பேரு | 0 | 1 | 0 |
| சுவீடன் | 0 | 1 | 0 |
| ஜப்பான் | 0 | 0 | 2 |
| நெதர்லாந்து | 0 | 0 | 2 |
| பெல்ஜியம் | 0 | 0 | 1 |
| நோர்வே | 0 | 0 | 1 |

### 23 வயதில் கோடீஸ்வரர்!



லாஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கின் களதடப் போட்டிகளையே (Track and Field events) பல அமெரிக்கர்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். இப்போட்டியில் அவர்களின் கதாநாயகனாக கார்ல்லிவிஸ் என்ற 23 வயது கறுப்பின வீரர் விளங்குகிறார்

அமெரிக்காவின் முன்னாள் கறுப்பர் இன ஒலிம்பிக் வீரரான ஜெஸ் ஓவன்ஸை பல விதத்திலும் கார்ல்லிவிஸ் ஒத்திருக்கின்றார்.

கார்ல்லிவிஸ் அதிகளவில் பணம் சம்பாதிக்கும் ஒரு மெய்வல்லுநராகக் கணிக்கப்படுகிறார். தனிப்பட்டமுறையில் தாம் பிரசன்னமாகும்நிகழ்ச்சிகள்ஒவ்வொன்றுக்கும் 5,000 டாலர்கள் அறவிடுகிறார். இவருக்கு ஹூஸ்டனில் 1,75,000 டாலர்கள் பெறுமதியான வீடொன்று இருக்கிறது. இவ்வீடு ஆறு டெலிபோன்களுடனும், அதிசக்திவாய்ந்த தொலைக்காட்சிப் பெட்டியுடனும் அமைந்துள்ளது.

ஒலிம்பிக்கில் இவர் நீளம் பாய்தல், 200 யார் ஓட்டம், 220 யார் தடைதாண்டி ஓட்டம், 400 மீட்டர்கள் ஓட்டம் என்பனவற்றில் பங்கெடுக்கிறார். இவை நான்கிலும் இவர் தங்கம்பெறுவது பெரும்பாலும் சாத்தியமாம்.

### 'மக்களுக்கு மக்கள் உதவி!'

கடந்த செவ்வாய்க்கிழமை ஒலிம்பிக் பந்தயங்களைப் பார்வையிட வந்துள்ள ஜெர்மன் பயணிகள் சிலரை லாஸ்ஏஞ்சல்ஸ் காடையர் கூட்டமொன்று மிரட்டியது.

சுமார் 40 பேர்கொண்ட அக்காடையர் கோஷ்டி அவ்வப்பாவிப் பயணிகளிடம் அவர்களது பணப்பைகளை மங்கலான வெளிச்சமுள்ள இடமொன்றில் பயமுறுத்திப் பறிப்பதில் ஈடுபட்டது. ஆனால் ஒலிம்பிக் தொண்டர் குழுவொன்று விஷயமறிந்து ஸ்தலத்திற்கு விரைந்து அப்பயணிகளைக் காப்பாற்றியது.

அத்தொண்டர் குழுவில் ஆண், பெண் இரு சாராரும் இடம்பெற்றனர். அவர்கள், 'மக்களுக்கு மக்கள் உதவி' என்ற வாசகத்தைத் தமது கோல உடையில் அணிந்து இதுபோன்ற குற்றச் செயல்களை முறியடிப்பதில் பொலிசாருக்கு உதவுகின்றனர். இரவு பகலாக லாஸ்ஏஞ்சல்ஸ் வீதிகளை இந்தத் தொண்டர் குழு கண்காணித்து வருகிறது.

[கி]

செய்திகள் ★

### மணி வாக்கு

மூர்க்கன் தன் வீட்டிலும், பிரபு தன் கிராமத்திலும், ராஜா தன் நாட்டிலும், வித்துவான் எல்லா இடத்திலும் பூஜிக்கப்படுவார்கள்.

— நீதிசாஸ்திரம்

## நமது நோக்கு

# ஒலிம்பிக் போட்டியும் ஜனதிபதி தேர்தலும்

விளையாட்டுலகம் அமெரிக்காவில் நடைபெறுகின்ற 23-வது ஒலிம்பிக் போட்டிகளில் கவனம் செலுத்துகிறது.

அரசியல் உலகம் சுமார் பன்னிரண்டு வாரங்களில் நடைபெறஇருக்கும் 41-வது அமெரிக்க ஜனதிபதி தேர்தல் செய்திகளைப் படித்தபடி இருக்கிறது.

தங்கப் பதக்கங்களைப் பெற்று முன்னணியில் நிற்கும் அமெரிக்கா இறுதியில் எந்த இடம் பெற்றாலும் இன்றைய ஜனதிபதி றீகன் அதனல் பெரிதும் பாதிக்கப்படமாட்டாரென்று கொள்ளலாம்.

விளையாட்டுஉலகம்வேறு; அரசியல் சதுரங்கம் வேறு. ஒலிம்பிக் வெற்றி வாகை சூடினால் ஜனதிபதி றீகனின் தோற்றம் அழகுறுவதோடு அதனைச் செவ்வனே பிரயோகிக்கும் திறமை அவருக்கு அதிகம்.

இன்றைய ஒலிம்பிக் போட்டியில் சோஷலிச நாடுகள் பங்குபற்றாததால் வெற்றி என்றாலும் அது 'நொண்டி' என்ற கேலிக்கும் இடமுண்டு. இன்றைய செய்தியைப் பார்க்குமளவில் அரசியல் துவேஷம் உள்ளிடுமாவென்ற சந்தேகமும் உண்டு. இந்தியக் கோஷ்டியை அவமதித்ததாக புதுடில்லியில் எதிர்ப்புக் கோஷம் எழுந்திருக்கிறது.

அதே சமயம் ஜனதிபதி றீகன் ரஷ்யாவின் அணு ஆயுதப் பேச்சுக்கள் எதற்கும் நிபந்தனை இன்றி ஆமாச் சொல்லத் தயாராகவிருப்பது போலத் தெரிகிறது. ஆனல் தேர்தல் பிரசாரம் தான் ரஷ்யாவின் செருக்குக்கு இடமளிக்கவில்லை யென்ற பாணியில் நடைபெறுகின்றது.

ஜனதிபதி றீகனுக்குப் போட்டியானவர் கடந்த ஆட்சியில் ஜனதிபதி காட்டரின் உப-ஜனதிபதியான திரு. வால்ட்டர் மொண்டேல்; மிதவாதியான லிபரல் கொள்கையுடையஇவர் கடந்த ஆட்சியிலே பெரும் திறமையுடைய பேர்வழி என்ற பெயர் பெருதவர். படிப்பும் ஆராய்ச்சியும் நிரம்ப இருந்தபோதும் நிர்வாகத் திறமையும் தீவிர போக்கும் அவருடைய ஆளுமைக்கு அழகுசெய்யவில்லை.

இன்றைய ஜனதிபதி உலக அரசியல் அரங்கில் ஓர் போர்ப் பிரியன் என்ற பெயர் பெற்றிருக்கிறர். நிக்கரகுவாவில், மத்திய அமெரிக்காவில் அனுவசியமான தலையீடுகள், லெபனனில் நடந்தேறிய ராணுவ வெறியாட்டங்கள், கிழக்கு-மேற்கு என்ற பிணக்கு; இதில் உருவான பதற்ற நிலை - இவை யெல்லாம் ஜனதிபதி றீகனின் குறைகள் என்று பொதுவாகக் கொள்ளப்படுகிறது.

இவற்றைப் பயன்படுத்தி றீகனை முறியடிக்கத் தேவையான வல்லமை மொண்டேலுக்கு உண்டா? உள்நாட்டிலும் பண வீக்கம், பொருளாதார வீழ்ச்சி, சமுதாய ஏற்றத்தாழ்வு, வேலையின்மை போன்ற பிரச்னைகள் உண்டு.

முன்னைநாள் ஜனதிபதி காட்டரும் மற்றும் ஜனநாயக ஆதரவாளர்களில் பெரும்புள்ளிகளும் மொண்டேல் தேர்தல் பிரசாரத்துக்குச் சூடு கிளப்பிவிட்டிருக்கின்றனர். தேர்தல் தேரில் எவர் வடம் பிடித்தாலும் தக்கதருணத்தில் தேர் இருப்புக்கு வரக்கூடிய சக்தி திரளுமோ என்பது ஐயம்.

போன வழியில் போகும் மனேபாவமும் துணிவாக விடயங்களைத் துரத்திப் பிடித்து விடிவுகாணும் ஆற்றலும், வெற்றியைப் பிரபலப்படுத்தும் நடிப்பும் மொண்டேல் அறியாத பண்புகள்.

சர்வதேச சமாதானம், தென் ஆசியாவைப் பிடித்திருக்கும் பீதி போன்ற பெரிய காரியங்களுக்குப் பொருத்தமான லட்சியவாதி மொண்டேல் என்பதை எவரும் ஆட்சேபிக்க முடியாது. றீகனிலும் பார்க்க மிகப் பொருத்தமானவர் என்பதை அவருடைய கடந்த காலப் பேச்சுக்கள் செயல்கள் நிரூபிக்கின்றன.

வறியவர்கள். கறுத்தவர்கள், சிறுபான்மைச் சமூகத்தவர், தொழிற் சங்கத்திற்கு அமைந்த தொழிலாளவர்க்கத்தினர் திரு. மொண்டேலையே விரும்புவர். ஆனல் முடிசூடா மன்னன்போல் நடிக்கும் ஆற்றலும் உலகளாவிய அறிமுகமும் றீகனுக்கு அதிகமுண்டு. அவருடைய நல்லதிர்ஷ்டம் நாட்டின் பொருளாதாரம் சீரடைந்து வருகிறது. பொது மக்களை மருட்டிவிடும் மேதாவிலாசம் அவருடன் பிறந்ததெனலாம்.

இன்று பாகிஸ்தானுக்குக் கிடைக்கும் இராணுவ உதவி முந்திய ஆட்சியிலேயே ஆரம்பமானது. அவ்வகையிலும் மொண்டேலுக்குப் பெரும் வெற்றி கிடைக்க வழியில்லை.

அவருடன் உபஜனதிபதிக்குப் போட்டியிடும் பெண்மணி - திருமதி கெரால்டின் பெராரோ பெரும் உற்சாகத்தைக் கிளப்பியிருக்கிறர். றீகனுக்குச் சார்பாக நிலைமை இருந்தாலும் ஈற்றில் போட்டி மிகக் கடுமையாக இருக்கலாம்.

## சுந்தரமூர்த்திநாயனர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சைவமகா சபையில் சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை நாளை சனிக்கிழமை நடைபெறுகிறது. நிகழ்ச்சியில் பண்ணிசை, சொற்பொழிவு என்பன இடம் பெறும்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத்தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஸ்ணன் ''பிறவேனுகிலும் மறவேன்'' என்னும் விடயம்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

# கைதடி அகதிகள் முகாம் வேறு இடத்துக்கு மாறும்

(யாழ்ப்பாணம்)

கைதடி ஆயுர்வேதக் கல்லூரியில் இயங்கிவரும் அகதிகள் முகாம், கைதடி சி. எம். எஸ், பழைய பாடசாலைக்கு மாற்றப் படவிருக்கிறது. இதற்கான அங்கீகாரம் மேலிடத்தில் கோரப்பட்டுள்ளது. அங்கிகாரம் கிடைத்ததும். அகதி முகாம் மாற்றப்படும்.

கைதடி ஆயுர்வேதக் கல்லூரியை யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் இம்மாத இறுதிக்குள் ஒப்படைக்க வேண்டியிருப்பதால், அகதி முகாமை மாற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது கடந்த ஒருவருடகாலமாக கைதடி ஆயுர்வேதக்கல்லூரியில் அகதிமுகாம் இயங்கிவருகிறது.

தற்போது கைதடி அகதி முகாமில், 111 குடும்பங்களைச் சேர்ந்த 409 அகதிகள் இருக்கின்றனர். இதுதவிர குருநகர் முகாமில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 5 அகதிகள் இருக்கின்றனர்.

தினமும், 14 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 10 ரூபாவும், 14 வயதிற்கு குறைந்தவர்களுக்கு 5 ரூபாவும், சமூக சேவைபகுதியினர் வழங்கிவருகின்றனர் (க)

### வெள்ளிச் சிந்தனை

## பாத யாத்திரை

சமாதானத்தை நிறுவ, கொள்கைப் பிரசாரம்செய்ய, புரட்சியையும் கிளர்ச்சியையும் மக்களிடையே பரப்பப் பாதயாத்திரை உபயோகப்படுவதுபோன்று-ஆத்மீகத்துக்கும் பாதயாத்திரை உண்டு ஆத்மீகப் பாதயாத்திரையில் ஈடுபடுபவர்களுக்கு ஆத்மீக வளர்ச்சியும் தெய்வீக அனுபவமும் ஏற்படும். அதனைச் சந்திப்பவர்களுக்கு ஆத்மீக எழுச்சி உண்டாகும்.

இன்று சைவமக்கள் பலர் கோவிலில் தீபாராதனை நடைபெறும்போது தரிசனம்செய்து கை கூப்பி வணங்குவதே இறைவழிபாடு என நம்புகின்றனர். ஆனல் தலை-கண்-மூக்கு-வாய்-காது-நெஞ் -கை -கால் முதலிய எல்லா அங்கங்களாலும் சிவவழிபாடு செய்யும்போதுதான் மனிதப்பிறவியால் நாம் முழுமையான பயனைப் பெறமுடியும்.

திருவங்கமாலை என்பது அப்பர்சுவாமிகள் அருளிய ஒரு தேவாரம் பதிகமாகும். இதில் ஒவ்வொரு அங்கத்தாலும் வழிபாடு செய்யும் முறையைத் திருநாவுக்கரசு நாயனர் உபதேசித்துள்ளார்.

கறைக்கண்டன் உறைகோயில் கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயன் இன்று என திருவங்கமாலையில் அப்பர்சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்.

''அப்பர் சுவாமிகள் நீண்டதூரம் நடந்துசென்று திருக்கோகரணப் பெருமானைத் தரிசனம்செய்து மகிழ்ந்தபடியால்தான் கால்களின் வழிபாடுபற்றிக் கூறுகையில் திருக்கோகரணத்தை குறிப்பிட்டுள்ளார்'' என்பர் பெரியோர்.

தலயாத்திரை பாதயாத்திரையாக செய்யப்படும்போது பலமடங்கு சிறப்புடையதாயிருக்கும் என்பதையும், நீண்டதூரம் அடியார்கள் பலர் கூடிச்செல்ல வ ய்ப்பான பாதயாத்திரை மனம்-வாக்கு-காயம் ஆகிய முக்காரணங்களாலும் செய்யப்படும் முழுமையான வழிபாடாக அமையும் என்பதையும் மறக்கலாகாது.

பாதயாத்திரை பஜனை ஊர்வலம் என்பனசெய்வோர் இச்செயல்களைப் புனிதக்குறைவானதாகவும், கௌரவ அந்தஸ்துகளை நிறுவும் செயல்களாகவும் கருதிச் செயற்படலாகாது. சிவபூசை செய்வோர் சிரத்தையுடனும் ஆசாரநியமங்களுடனும் செய்வதுபோல ஈடுபடவேண்டும்.

ஒவ்வொரு தலத்துக்கு அல்லது, ஒரேதலத்தைச் குறித்து ஒவ்வொருவரும் அவ்வப்போது பாதயாத்திரை செய்யவேண்டும். பாதயாத்திரை செய்வதால் மனவிரிவு-பக்தி உணர்வு - இறை அனுபவம் போல்வன நிச்சயமாகக் கிடைக்கும்.

தொண்டர்காள் தூசி செல்லீர்
பக்தர்காள் சூழப் போகீர்
ஒண்திறல் யோகிகளே
பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே
கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நாடாள்வோம்
அல்லற்படைவாராமே

—மாணிக்கவாசகர்

— அருளாளன்

# தீயணைப்புப்படை நிதிக்கு ரூ.3,68,000 வசூல்

(யாழ்ப்பாணம்)

முன்தொடர்ச்சி 356,024·50 லக்ஷ்மிஜுவல்ஸ் கொழும்பு 500-00, குமார் கனகரத்தினம் கொழும்பு 50-00, சுரேந்திரன் கணநாதபிள்ளை கொழும்பு 100-00, திருமதி சோம சுந்தரம் கொழும்பு 10-00, பி. கணநாதபிள்ளை கொழும்பு 25-00, எம். எஸ். நமசிவாயகம் கொழும்பு 10-00 வி, பி. ஜெயக்குமார் கொழும்பு 25-00, எஸ். சோமசுந்தரம் கொழும்பு 50-00, ரஜீவ் சிவசங்கர் கொழும்பு 40-00, குரு, எஸ் 13 சப்பர் மாக்கட் கொம்பிளெக்ஸ் 50-00, துரை சன்ஸ் கொழும்பு 50-00 எஸ். குருபரன் கொழும்பு

(5ம் பக்கம் பார்க்க)

இன்று

நல்லூர்க்கந்தன்

2-ம் திருவிழா



## ஏர் நல்லைச் செட்டியவன்

நல்லைத் தமிழ்முருகன் ஞானப் பழமுருகன்
தொல்லை களைந்தெறியும் தொல்முருகன் —
நல்லைவளர்
பத்திக் கொருமுருகன் பாடும் புகழ்முருகன்
முத்திக் கருள்முருகன் முன்

அட்டசித்தி ஐஸ்வரியம் ஆனமகப் பேறுதனை
இட்டமுட னேயருள்வான் ஏர்நல்லைச் —
செட்டியவன்
நின்று நினைந்துருகி நித்தமழும் பத்தருக்கே
என்றும் அருள்பொழிவான் எண்ணு.

மின்னனைய வுருவுற்ற மெல்லிடைநல் வள்ளியை
மேவியணை கின்ற முருகா!
விஞ்சுபுகழ் கொண்டதெய் வானையெனும் அம்மையை
முதலே வரித்த முதலே!
உன்னையெக் கணமுமெம் முள்ளத் தயர்க்கிலேம்
உலகைவலம் வந்த உரனே!
உள்ளொன்று வைத்தியாம் புறம்பொன் றுரைக்காத
உசிதகுண மதனை யீவாய்!
இன்னலால் எம்மையேன் இவ்வாறு எண்ணற்ற
இம்சைப் படுத்து கின்றாய்?
இவ்வளவு காலமும் சோதித்த சோதனைகள்
இன்னமும் போத வில்லையோ?
வன்மைகொன் நல்லையில் வளிவிதெய் வானையொடு
வாழ்வுகொள் கந்த வேளே!
வடிவேல் கரங்கொண்டு வண்ணமயின் மீதேறி
வந்தெமக் கருளு வாயே!

— கவியரசு முருகசூரியன்

○ ○ ○

## கதிர்காமக்காட்சி

வண்டார் கடம்பன் வயமாப் பவனியைக்
கண்டார் தவஞ்செய் தவர்

கற்பூரத் தீபம் கமழும் அகிற்றூபம்
முற்போகும் வேலன் விழா

அன்னம் மயிலென வந்தரக் காவடி
அன்ப ரெடுப்ப ரவண்

செந்திக் குளிப்பர் சிவசண் முகனருளால்
முன்றீ வினைதீர்ப் பவர்

மாவிளக்கை யேற்றி மலரால் அருச்சித்துச்
சேவிப்பர் செவ்வேள் கழல்

கந்தன் பிரசாதம் மைந்தர் தரவுண்டு
மந்தி யிருக்கும் மதில்

— (புலவர்) வே. கனகசபாபதி

# "அரை மணிநேரத்தில் அனுப்புவதாகக் கூறி எனது கணவரை அழைத்துச்சென்றனர்"

## மரண விசாரணையில் சாட்சியம்

(இரா. உதயகுமார்)

''சம்பவ முன்தினமிரவு என்கணவனை அழைத்துச் சென்ற இளைஞர்கள் அரை மணித்தியாலத்தின்பின் அனுப்பி வைப்பதாகக் கூறி அழைத்துச் சென்றார்கள். பொழுதுவிடிந்தும் அவர் வீடு திரும்பவில்லை. கணவரும், கணேசமூர்த்தியும் சுடுபட்டு மதகொன்றில் இறந்து கிடந்ததாக எனது அண்ணர் கூறினார்''

இவ்வாறு மட்டக்களப்பு அம்பிலாந்துறை என்னுமிடத்தில் கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத நபர்களால் சுடுக் கொல்லப்பட்டவர்களின் மரணவிசாரணையில் குமாரசிங்கத்தின் சாட்சியமளித்த காலஞ்சென்ற மனைவி ா. இராசகுமாரி தெரிவித்தார்.

அம்பிலாந்துறை வாசிகளான மு. கணேசமூர்த்தி [30 வயது], வே. குமாரசிங்கம்[31 வயது] ஆகிய இருவரும் சுடப்பட்டு மதகொன்றில் கட்டிப்போடப்பட்டிருந்தனர்.

மேற்படி மரணம் குறித்து மட்டக்களப்பு பதில் நீதிபதி கே. தங்கவடிவேல் மரண விசாரணை மேற்கொண்டார். சாட்சி மேலும் சாட்சியமளிக்கையில் கூறிறதாவது:-

''அன்றிரவு நானும் எனது கணவரும், பிள்ளைகளும் வீட்டில் உரையாடிக்கொண்டிருந்தோம். அப்போது குமாரசிங்கம், குமாரசிங்கம் எனப் பல தடவைகள் வாசலில் நின்று காலஞ்சென்ற கணேசமூர்த்தி அழைக்கும் சத்தம் கேட்டது. 5வது தடவை அழைத்தபோது நான் யாரென்று கேட்டு வாசலுக்குச் சென்றேன். அங்கு கணேசமூர்த்தியுடன் 3 இளைஞர்கள் காணப்பட்டனர். அவர்கள் ''உன் புருஷன் எங்கே? என்று கேட்க, நான் இங்கிருப்பதாகக் கூறினேன். அவர்கள், அவருடன் கதைக்க வேண்டுமென்றனர். இங்கு கதைக்கலாம் என்றபோது இல்லை அனுப்பிவையுங்கள். அவரை அரைமணி நேரத்தால் அனுப்பிவைப்போம், சேர்ட்டையும் போட்டு சைக்கிளையும் கொண்டுவரச் சொன்னார்கள்.''

நான் கணேசமூர்த்தியிடம் அவர்கள் யார்? என்று கேட்க சில் பொடியன்கள் என்றார். பின்பு என்கணவர் அவர்களுடன் சென்றார். அதன்பின்னர் திரும்பவில்லை'' என்றார்.

காலஞ்சென்றவர்களுள் இருவரில் ஒருவரான மு. கணசமூர்த்தியின் மனைவி வை. விஜயலட்சுமி(24 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''சம்பவதினமுன்இரவுநான் வீட்டிலிருக்கும்போது 7 பேர் வந்து என் கணவர் எங்கே என்று கேட்டார்கள். அவரது தங்கை வீட்டிய் நிற்பதாகக் கூறிக்கொண்டிருக்கையில் என் கணவர் டோர்ச் லைட்டுடன் எதிரேவந்துகொண்டிருந்தார். அப்போது அவர்கள் அவரைப் பிடித்து இழுத்துச் சென்றார்கள். அவர் அன்றிரவு வீடு திரும்பவில்லை. மறுநாட்காலை பழுகாமம் செல்ல வந்த ஒருவர்மூலம் அவர் மதகொன்றில் இறந்து கிடப்பதாக அறிந்தேன்'' என்றார்.

பிரேத பரிசோதனை சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஸ்ரீபஞ்சலிங்கம் மேற்கொண்டார். விசாரணை முடிவில் இருமரணங்களும் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## எதிரி விடுதலை

(பண்டத்தரிப்பு)

நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால தடைக்கட்டளையை மீறி காணியொன்றில் வீடு கட்டியதாகவும் இதன் மூலம் நீதிமன்றத்தை நிந்தாட்சனை செய்ததாகவும் குற்றஞ்சாட்டி மல்லாகம்மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் எதிரியான சி. பிறைசூடிக்குருக்கு விடுதலை செய்யப்பட்டார்,

சுழிபுரம் பறுளை ஈசுவர விநாயகர் ஆலயத்திற்கு சொந்தமான காணி என உரிமை கோரி சுழிபுரத்தைச் சேர்ந்த சின்னையா சின்னத்தம்பி வைரமுத்து தனிப்புளிசிங்க முதலியார் ஆகியோரால் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரியான ஆலய பூசகர் பிறைசூடிக்குரு குறித்த காணியில் வீடு எதுவும் கட்டக் கூடாது என்று நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

இத்தடை உத்தரவை மீறியதாக மனுதாரர்கள் தாக்கல் செய்த நீதிமன்றத்தை நிந்தாட்சனை செய்ததான மனுவை விசாரணை செய்த மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் அங்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களின் பிரகாரம் அவர் தடை உத்தரவுக்கட்டளையை பெற்ற பின்னர் பிரச்னைக்குரிய காணியில் வீடுகட்டவில்லை என்றும் மன்றை அவமதித்த குற்றச்சாட்டு சம்பந்தமாக எந்தவொரு செயலிலும் அவர் ஈடுபடவில்லையென்றும் மன்றை அவமதித்த குற்றச்சாட்டு சம்பந்தமாக அவரை நான் விடுதலை செய்கின்றேன் என்றும் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கில் மனுதார் சார்பில் சட்டத்தரணி தா. சங்கரப்பிள்ளை ஆஜரானார். எதிரி தரப்பில் சட்டத்தரணி திரு. சோ. தேவராசாவின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. செ. சண்முகதாஸ் ஆஜரானார்

## ராஜதந்திரி அமரர் மாணிக்கலிங்கம்

கே. மாணிக்கலிங்கத்தின் மறைவு இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கும் பெரும்இழப்பாகும். இச்சேவையில் படிப்படியாகப் பதவி உயர்வுகளைப் பெற்று இறுதியாக இந்தோனேஷியாவில் ஜகார்த்தா நகரில் இலங்கைக்கான தூதுவராகும் அரிய கௌரவத்தை இவர் பெற்றிருந்தார்.

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் மாணிக்கலிங்கம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியிலும், கொழும்பு றோயல் கல்லூரியிலும் தமது ஆரம்பக் கல்வியைப் பயின்றார். பள்ளிப் பருவத்தில் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டிக்களிலும் அவர் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றார்.

பட்டப்படிப்பை முடித்த பின்னர் இலங்கை வெளிநாட்டுச் சேவையில் அவர் சேர்ந்து கொண்டார். அப்போது இச்சேவை இலங்கையில் அதன் ஆரம்பக்கட்டத்தில் இருந்தது. அத்துடன் பலசவால்களையும் ஏற்கவேண்டிய ஒரு துறையாகவும் அது காணப்பட்டது. ஆனால் அமரர் மாணிக்கலிங்கம் இச்சேவையில் ஒரு சாதுரியம் மிக்க ராஜதந்திரியாக விளங்கினர். உலகின் பல பிரதான நகரங்களிலும் கடமையாற்றியதுடன் உயர்மட்டத்திலுள்ளவர்களின் நட்பையும், செல்வாக்கையும் பெறுவதிலும் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார்.

வெளிநாடுகளில் ராஜதந்திர விருந்தினர்களை மிகுந்த பரிவோடு வரவேற்றார். ஆனால் அவர் ஒருபோதும் தனது நிலையிலிருந்தும் கீழிறங்கும் வகையில் அவர்களை விமான நிலையங்களில் வரவேற்கும் போதோ அல்லது சந்திக்கும் போதோ, நடந்துகொள்ளவில்லை. எப்போதும் தமக்குரிய கடமையுணர்வுடனேயேசெயல்பட்டார் சிறப்பாகக் கூறுவதாயின் அவர் ஒரு 'எடிபிடி' யாளனாக ராஜதந்திர வட்டாரத்தில் செயல்படவில்லை.

சட்டதிட்டங்களுக்கு அவர் என்றும் மதிப்பளித்தார். தமது நலன்கருதி அல்லது தம்மிடம் வரும் ராஜதந்திர விருந்தினர்களின் விருப்புகளுக்கு ஏற்றவாறு அவற்றில் அவர் மாற்றங்களைக் கொண்டுவரவில்லை. தமக்குச் சரியெனப்பட்டதை மனச்சாட்சிக்கு மறுப்பில்லாதவகையில் அவர் எடுத்துக்காட்டுவதிலும் தயக்கம் கொள்ளவில்லை. இதனால் எமது ராஜதந்திரிகள் பலருக்கு வெளிநாடுகளில் மேலதிக நாட்களைச் செலவிடுவதிலும் கடமையை மறந்து உல்லாசமாகத்திரிவதிலும் பலத்த சிரமம் அமரர் மாணிக்கலிங்கத்தின் சேவையின்போது காணப்பட்டது.

விசுவாசம், நட்புமிக்க சுபாவம், பரந்த மனப்பான்மை ஆகிய பண்புகளுடன் தமது நண்பர்களுக்கு இனியவராக அவர் இருந்தார். உத்தியோக விடயங்களை அவர் தமது தேக நலன்களையும் புறக்கணித்து இரவுபகலாக மேற்கொண்டார். இதனால் தேகாரோக்கியம் குன்றுவதன் அறிகுறிகள் அவரின் உடம்பில் நிழலாடின. எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்!

அமரர் மாணிக்கலிங்கத்தின் மறைவு வெளிநாட்டு சேவைக்கு ஒருபெரும் இழப்பாகும். தமது கடமையைப் பெரிதென மதித்து அல்லும் பகலும் சௌகரியமான வாழ்க்கை வசதிகளையும் புறக்கணித்து அவர் வாழ்ந்தார். சகலரையும் கவரும் பண்பைக் கொண்டிருந்த அமரர் மாணிக்கலிங்கத்தை என்றும் அன்புடன் நினைவு கூருவோமாக!

இ. இரத்தினசாமி

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

இன்று கோப்பாய் தெற்கு இருபாலை அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயத்தில் இருபாலை சைவபரிபாலன சங்கத்தின் ஆதரவில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை வைபவம் நடைபெறும்.

## மன்னாரில் சுவரொட்டிகள்

[மன்னார்]

மன்னார் பட்டினத்தில் சில மதில் சுவர்களில் பல சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இச் சுவரொட்டிகளில் கடந்த ஜூலை கலவரத்தின் போதுவெலிகடைச் சிறையில் கொலை செய்யப்பட்டவர்களின் படமும், தமிழ்ப்பகுதிகளில் ஹர்த்தால் செய்வது தொடர்பாகவும் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இச் சுவரொட்டிகள் இராணுவத்தினரால் அகற்றப்பட்டன.

## நாளைய செய்தி இன்று

★ பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் உற்சவம் நாளை நடைபெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

★ சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் தினம் நாளை ஆகும்.

## ஊர்காவற்றுறை பொலிசார் ஆலயத்திற்கு உதவினர்!

(வேலணை)

ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் அங்கு கடமையாற்றும் பொலீஸ் உத்தியோகத்தர்களும் கூட்டாக இணைந்துஇவ் வருடத்தில் தங்களுக்கு கிடைத்த மாதாந்த பிரயாண விசேட படிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து மண்கும்பான் வெள்ளைப்புற்றடி அருள் மிகு விநாயகர்ஆலயத்திற்கு ஒலி பெருக்கி வாங்குவதற்காக கொடுத்திருக்கின்றார்கள்.

இக் கொடுப்பனவை பொலிஸ் அதிபர் திரு ரி.ஈ ஆனந்தராசா ஆலயத்தின் பிரதான குருக்களிடம் ஆலய தர்மகர்த்தா சபையின் பொருளாளர் திரு வை. கனகலிங்கம் முன்னிலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் வைத்து சம்பிரதாய முறைப்படி கையளித்தார்.

பருத்தித்துறை டிப்போ விவகாரம்:

## தூதுக்குழுவொன்று அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை

(கரவெட்டி)

மூடப்பட்ட பருத்தித்துறை டிப்போவை மீண்டும் திறக்கும்படி சட்டத்தரணி திரு. எம். கே. முத்துக்குமாரு தலைமையில் சில பிரமுகர் குழு போக்குவரத்து அமைச்சு உயர் அதிகாரிகள், மத்திய போக்குவரத்துச்சபை அதிகாரிகள் ஆகியோரிடம் பேச்சுவார்த்தைகள் நடாத்தியது.

இந்த டிப்போ மூடப்பட்டு கோண்டாவில் டிப்போவுடன் சேர்க்கப்பட்டதால் வடமராட்சி மக்கள் பெரிதும் பிரயாணத்திற்குக் கஷ்டப்படுகின்றனர். எல்லா பஸ்களும் கோண்டாவிலிலிருந்து பருத்தித்துறை வந்தே சேவைகளை ஆரம்பிக்கின்றனவாம். இந்த பிரச்னை பற்றி வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினமும் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமத் உடனும் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாகத் தெரிகிறது.

## தீயணைக்கும்படை

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

50-00, வி, தேவசேனாதிபதி கொழும்பு 30-00, எஸ். சச்சிதானந்தசிவம் கொழும்பு 50-00, கே. உமாசுதன் கொழும்பு 20-00, ஏ. ஸ்கந்தா கொழும்பு 50-00, ஜெ. தயாபரன் கொழும்பு 25-00, ஆர். செந்தில்குமார் கொழும்பு 50-00, வி. எஸ். குமார் கொழும்பு 50-00, பி. சிறிகாந்த் கொழும்பு 25-00. எம். ரவீந்திரநாத் கொழும்பு 50-00, கே. ரி, பிராபாரூபன் கொழும்பு 25-00, என். எஸ். லிங்கேஸ்வரன் கொழும்பு 25-00, ஆர். எல். ராஜ்குமார் கொழும்பு 25-00, காசி குமார் கொழும்பு 15-00, பரம் ஆறுமுகம் கொழும்பு 100-00, கே. சத்தியபாலன் கொழும்பு 25-00, நலன் விரும்பி கொழும்பு 15-00, கே. எம். டிவாகரன் கொழும்பு 20-00, எஸ். இரங்கநாதன் கொழும்பு 30-00, எம். காசிப்பிள்ளை கொழும்பு 25-00, கே. திருக்குமாரன் கொழும்பு 25-00, எஸ், ஸ்காந்தன் கொழும்பு 25-00, அன்ரன் குமாரசுவாமி கொழும்பு 25-00, ஆர். ஜெகசோதி கொழும்பு 25-00, எஸ். சண்முகம் கொழும்பு 100-00, ஏ. கந்தசாமி கொழும்பு 100-00, வி. சங்கரன் கொழும்பு 100-00 எஸ். சிவசுந்தரம் கொழும்பு 25-00, எஸ். எச். கமால் சோனகதெரு யாழ்ப்பாணம் 50-00.

மொத்தம் 368,114-50.

## வருடாந்த உற்சவம்

[மன்னார்]

தலை மன்னார் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 27 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 5 ம் திகதிவரை நடைபெறும்.

★ அமெரிக்கா ★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!

AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு-1. போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். போன்: 22689

# கலை-வர்த்தக பட்டதாரி ஆசிரியர்

1982 ஆம் ஆண்டு இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சில் பதிவுசெய்து கொண்ட கலை, வணிகவியல் பட்டதாரிகட்கு அண்மையில் கல்வியமைச்சினுல் ஆசிரியர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டன மொத்தம் 270 பேர் தெரிவாகியுள்ளனர்-

அதில் தெரிவாகியோர் விபரம் வருமாறு:-

இரா. குணநாதன்- மிருசுவில், செல்வி எஸ் ஏ, எவ். பென்தி மொறட்டுவ, பி. சிவாஜி- கொழும்பு- செல்வி கிறேசி யோசெப்- கொழும்பு ஏ. எஸ். முகமட்- வெயாங்கொட, செல்வி எம். எஸ். எவ் மார்ஜான்- பேருவளை; செல்வி ஏ எஸ். எவ், ஜெஸ்னியா- களுத்துறை, செல்வி எச் ஜே. ஏ. டீன்- களுத்துறை, செல்வி ஏ. எம். எவ். முவீடா- டார்காநகரம் செல்வி எம். எவ். யு. நஜீபா- களுத்துறை, செல்வி மாலிகா சறீவ்டீன்- கண்டி, செல்வி எஸ். எல். யு. சமீனு- முறத்தலாவை, செல்வி ஏ எஸ். சித்திமார்லியா- முறத்தலாவை, செல்வி யு எல். எம் எம். ஹாய்ரா- காலி, செல்வி எம். எஸ் எஸ். என். உம்மா- மாவனல்ல, கே. அரசரத்தினம்- அறுனயக, செல்வி ஏ. சி. எல் யு. அயிசாஉம்மா- மாவனல்ல, எஸ். எம். ருசீக்- மாவனல்ல, செல்வி எஸ். டி. சித்திவகினு- தேவனுகல, செல்வி ஏ. டபிள்யூ. சித்தி அயிசா உம்மா- கிம்மற்ராகம, திரு. எம். எச். எம். சகாறியா- கிம்மற்ராகம, செல்வி ஏ. எம். எவ். மடனியா- அக்குறஸ்ஸ, செல்வி என். தேவரஞ்சிதம்- முள்ளியவளை, சிங்கரட்ணம்- முல்லைத்தீவு, திருமதி ரி. குணலட்சுமி முல்லைத்தீவு, திருமதி எஸ். நாகேஸ்வரி- முல்லைத்திவு, செல்வி பசுபதி கந்தையா- முள்ளியவளை, சின்னத்தம்பிராசா- அளம்பில், கே கனகையா- முள்ளியவளை, செல்லையா பாலச்சந்திரன்- முள்ளியவளை, ஜே. எஸ். மகுசூக்- வாகொகொட்ட; ஏ. ஆர். எஸ் எஸ். சூலைஹா- மாத்தளை, செல்வி எம். எச். சகுணவாசா- மாத்தளை, செல்வி யு. ஏ. கறுப்பையா- மாத்தளை, செல்வி கே. யோகசுந்தரி- மாத்தளை, செல்வி ரி. எவ். மாதயா- வகாகொட்ட செல்வி எஸ். செல்வராணி- பரந்தன், செல்வி பரிமளம் கந்தையா- வட்டக்கட்சி, செல்வி வி. தர்மலிங்கம்- கிளிநொச்சி, செல்வி எஸ். புஸ்பராணி- திருக்கேதீஸ்வரம், செல்வி எஸ். எம். டபறியா- மன்னார், திருமதி எம். எஸ். மேரி- மன்னார், செல்வி நாகன் பாக்கியவதி- தாராபுரம், செல்வி எஸ் செபஸ்தியம்மா- முருங்கன், செல்வி சி. சிரேசம்மா சில்வா- நானுட்டன், திரு. முத்துராமன் சுந்தரம்- வங்காலை, திரு. சட் ஏ. ஷாங்கீர்- புத்தளம், செல்வி ரி. தர்மலிங்கம- வவுனியா, திரு. ஏ. பாலசுந்தரம்- டிக்கோயா, திரு. எஸ். கோபிநாத்-கல்கிறனேயா, திரு. ஜே. ஏ. ஜபாறுல்லா- கல்கமுவ, எம். ரி. எம். நம்சீர்- பொல்காவலை, என். சிதம்பரமூர்த்தி- திருமலை, செல்வி வி. வசந்தகுமாரி- திருமலை, எஸ். இராஜலிங்கம்- திருமலை, செல்வி உமாதேவி நடராசபிள்ளை - சேனையூர், ஏ.முகமட் அனிபா-மூதூர், ரி.புவனேந்திரன் - திருமலை, எஸ். மோகனசுந்தரம்-திருமலை, ஏ.எம்.முசாமில் - தோப்பூர், செல்வி மாணிக்கம் சுலோசனுதேவி - திருமலை, வி. முகமட் மூமீன் - கிண்ணியா, ஆர்.சுகிர்தராசா பொத்துவில், சின்னத்தம்பி சோமசுந்தரம் - அக்கரைப்பற்று, ஏ. அப்துல் அசீஸ் - பொத்துவில், ஏ. எம். மீராசாய்பு - நிந்தவூர்-4, என்.அருளானந்தம் - கல்முனை, ஈ. முகமட் ஹுசைன் - நிந்தவூர், செல்வி ஜே. திருநாவுக்கரசு - கல்முனை, ஏ.ஏ.சி.எம்.ஹலீம்- சம்மாந்துறை, வி. ஆசைரத்னம் - கல்முனை, செல்வி எஸ். பி. மீராசாகிப் - அக்கரைப்பற்று, செல்வி எஸ்.சிதம்பரம் பிள்ளை-மட்டக்களப்பு, செல்வி கே. சங்கரப்பிள்ளை- கல்லாறு. எம். விமலநாதன் - மண்டூர், எஸ். குறூஸ் - மட்டக்களப்பு, செல்வி கே. ரஞ்சிதமலர் - பெரிய போரதீவு. செல்வி கந்தையா கோசலை - மட்டக்களப்பு, திருமதி பி. துரைராசா - குருக்கள் மடம், ரி. கனகசூரியம் - பெரியபோரதீவு, செல்வி பி. சுந்தரசர்மா- பெரியபோரதீவு, கே.கிருளயசர்மா-மட்டக்களப்பு. செல்வி எம். மேரி பெரேரா - மட்டக்களப்பு, ரி.துரைராசா - குருக்கள்மடம், திருமதி கே. விஜயரகுநாதன் - மட்டக்களப்பு, கே. கொல்வின் பெரேரா-மட்டக்களப்பு, ஏ.நடேசன் - மட்டக்களப்பு, செல்வி சுசீலா குமாரவேல் - பெரியகல்லாறு, ரி.தாமோதரம்பிள்ளை - பெரிய போரதீவு, ஏ.கிருஷ்ணவேனி - மட்டக்களப்பு, எஸ்.கிருஷ்ணராசா- கரவெட்டி, செல்வி வி. வேதநாயகம் - கோப்பாய், செல்வி ஏ.மகாதேவி - யாழ்ப்பாணம், செல்வி கே. வைத்திலிங்கம் - சண்டிலிப்பாய், பி. ஜெயரட்ணராசா - யாழ்ப்பாணம், எஸ். கைலாசநாதன் - சுழிபுரம், செல்வி இந்திரா தர்மானந்தம் - சுழிபுரம், திருமதி ஆர். குணதாசன் - காங்கேசன்துறை, திருமதி கே. இராசதுரை- யாழ்ப்பாணம், செல்வி எம்.வன்னியசிங்கம்- தெல்லிப்பளை, செல்வி.எஸ்.சிவலிங்கம்- சுன்னுகம், எஸ்.செபஸ்தியான் தங்கராசா - யாழ்ப்பாணம், கே. கதிர்காமநாதர் - மானிப்பாய், மனோகரன்- கரவெட்டி, செல்வி ஏ. சசிகலா ஜோர்ஜ் - யாழ்ப்பாணம், செல்வி இந்திராணி தாமோதரம்பிள்ளை - கொக்குவில், செல்வி வசந்தி சோதிலிங்கம் - அச்சுவேலி, சி. சிவநாதன் - யாழ்ப்பாணம், செல்வி எஸ். பரமலிங்கம் - பருத்தித்துறை, செல்வி ஆர். சிவசுப்பிரமணியம் - தெல்லிப்பழை, செல்வி வி. சபாரட்னம் - சாவகச்சேரி, செல்வி எஸ்.ஜே.ஜெயசீலி- கரவெட்டி அரியராசா குணபாலன்- அச்சுவேலி, திருமதி எஸ்.சுந்தரலிங்கம் - சாவகச்சேரி, செல்வி ராகினி மகாலிங்கம் - மீசாலை, செல்வி கே.ஐயம்பிள்ளை - சுழிபுரம், திருமதி மேரி அனி பிரான்சிஸ் - யாழ்ப்பாணம், செல்வி கே சிவகுமாரி-மீசாலை, செல்வி கே.கதிரமலை - காங்கேசன்துறை, செல்வி சி.வசந்தா- கொடிகாமம், எஸ். மணிவாசகர் - நயினுதீவு, செல்வி கே. மாணிக்கலிங்கம்- நான்டதீவு, எம். இராசநாயகம்-அல்வாய், செல்வி ஏ. எம். ஆர். பி. மரியாம்பிள்ளை - பருத்தித்துறை, செல்வி எஸ். இராசலட்சுமி- பருத்தித்துறை, செல்வி ஏ. சுப்பிரமணியம் - தெல்லிப்பழை, ஏ. நடராசா-மிருசுவில், செல்வி சிறீலச்சுமி சின்னத்துரை - காங்கேசன்துறை, செல்வி ஜெயந்தி தர்மலிங்கம்- யாழ்ப்பாணம், செல்வி விமலாதேவி வேலுப்பிள்ளை-அல்வாய், செல்வி ரி செல்வகுமார் - புங்குடுதீவு, எஸ். விக்ரர் அருள் பிரகாசம்-நெடுந்தீவு, தியாகராசா ராசபாலன்-நயினுதீவு, எம். வை. எம். ஸ்மாத்-யாழ்ப்பாணம், செல்வி இராசமலர் ராமலிங்கம்-கொடிகாமம், பசுபதிப்பிள்ளை தவராசா-மானிப்பாய், செல்வி கமலினி சந்திரசேகரம்-பருத்தித்துறை, எம். சண்முகலிங்கம் - தாளையடி, திருமதி இந்திரகுமாரி யோகராசா-அல்வாய், எஸ். பாலசுப்பிரமணியம் - சாவகச்சேரி, செல்வி எஸ். சுப்பிரமணியம்- சண்டிலிப்பாய், பி. கனகரட்ணம்-மிருசுவில் செல்வி கே. சுலோசனு, மீசாலை, திருமதி ஜெயலக்சுமி ராஜேந்திரன்- சுன்னுகம், செல்வி சிறீநடராசா-உரும்பராய், வி. மனோகரன் மிருசுவில். செல்வி ஞானும்பிகை சின்னையா-சுழிபுரம், செல்வி பத்மலோசினி கந்தசாமி - கொக்குவில், செல்வி செல்வராணி பொன்னையா-கைதடி; கிருஷ்ணன் லோகநாதன்-கரவெட்டி, செல்வி தங்கமணி சபாபதி தெல்லிப்பழை, செல்வி மைத்திரி சபாரட்ணம்-ஊர்காவற்றுறை, செல்வி வி. நகுலேசபிள்ளை-வேலணை, செல்வி தனலட்சுமி நகுலேச பிள்ளை- வேலணை, செல்வி இந்திராணி தர்மலிங்கம்-கொக்குவில், செல்வி சத்தியதேவி ஆரம்பமூர்த்தி-அல்வாய், சின்னத்துரை கணேஸ்வரன்-வேலணை, செல்வி பி பசுபதிப்பிள்ளை- வேலணை, வி. அருளானந்தம்- பருத்தித்துறை, கே. சுப்பிரமணியம்-கரவெட்டி, செல்வி ரட்ணபூபதி முருகுப்பிள்ளை- மீசாலை, செல்வி இந்திராணி சின்னத்துரை - சாவகச்சேரி, செல்வி மீரா குமாரசாமி-தெல்லிப்பழை, கந்தையா அருந்தவபாலன்-சாவகச்சேரி, திருமதி மங்களராணி சுப்பிரமணியம்- யாழ்ப்பாணம், செல்வி பரமேஸ்வரி முருகையா-தெல்லிப்பழை, எஸ். மார்க்கண்டு- சாவகச்சேரி, செல்வி ஈஸ்வரி பரமானந்தர்-சாவகச்சேரி, செல்வி காமினி இளையதம்பி- வல்வெட்டித்துறை, செல்வி காந்தருபதேவி பொன்னுத்துரை-கோண்டாவில், செல்வி கே. இராசதுரை-அல்வாய்,

இன்னும் வரும்

---

## இன்றைய பலன்

மாதம்-ஆடி
திகதி-19(03-08-1984)
வாரம்-வெள்ளி
திதி-ஸப்தமி பின் இரவு 2-07 வரை
நக்ஷத்திரம்-சித்திரை பிற் பகல் 5-31 வரை

மேடம்:- ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாராத விதமாகச் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் உள்ளக் கிடக்கைகளை ஒருவரிடமும் சொல்லாதிருக்கவும் நிதானம் வேண்டும்

இடபம்:- கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை காதலர்கள் எண்ணங்கள் கைகூடும் இன்பதுன்பங்களின் ஆதரவும் கிடைக்கும் எதிர்பாாத்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

மிதுனம்:- அறவழியை நாடுவீர்கள் தெய்வச்சிந்தை மேலோங்கி நிற்கும் குடும்பத்தில் சுகமான நிலை தென்படும் புண்ணிய யாத்திரையொன்றை மேற் கொள்ள முற்படுவீர்கள்.

கடகம்:- வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும் புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள் நீண்ட நாள் கனவு இன்றுநனவாகும் சகலதுறைகளிலும் முன்னேற்றமுண்டு.

சிங்கம்:- கண்துடைப்பு வேலைகளால் நலிவுக்குமிடமுண்டு உடல்நலமும் சிறிது பாதிக்கலாம் குடும்பத்தில் சிறுபூசல் தோன்றி மறையும் உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

கன்னி:- தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும் வேண்டியவர் ஒருவரைப்பகைத்துக்கொள்ள நேரிடும் கடமையாற்றுமிடத்தில் நிதானம் வேண்டும் மௌனம் நன்று.

துலாம்:- தனத்துடன் வாழ்வு இன்றுதவருது கிடைக்கும் சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு நீண்ட நாள் கடன்நிவர்த்தியாகும் வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

விருச்சிகம்:- தாமதகுணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம் வேண்டாத விவாதங்களால் வீண்பெயர் கேட்கநேரிடும் கலகச்செய்திக்கும் இடமுண்டு நிதியில் நெருக்கடியும் தோன்றும்.

தனுசு: மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமானதினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு தாய் வழிஆதரவு தாராளமாகக் கிடைக்கும் வாகனநலனுக்கும் இடமுண்டு

மகரம்:- புத்திரவழியால் புகழ் வந்துசேரும் வெளியூர் புதினமும் உண்டு குடும்பத்தில் சுகமான சூழ்நிலை தென்படும் புதிய தொடர்புகள் ஏற்படும் அதன் வழி முன்னேற்றமும் மகிழ்ச்சியும் தென்படும்.

கும்பம்:- பொருள்விரயத்திற்கு இடமுண்டு கடமையாற்றுமிடத்தில் கண்துடைப்புவேலைகள் நடைபெறும் நண்பர் ஒருவர் உங்களை ஏமாற்றக்கூடும் சிக்கலைத்தவிர்க்கவும்.

மீனம்:- சமயோசிதபுத்தி உங்களுக்குத் தாராளமான சிந்தனைகளைத் தோடித்தரும் மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் உள்ளத்திலே உவகைதுள்ளும்.

திருமலை
வே. ரவீந்திரன்

---

## நேர்முகப் பரீட்சை

(ஊரெழு)

வலிகாமம் கிழக்குப் பகுதி விவாகப் பதிவு அலுவலுக்கும் கோப்பாய் பகுதி பிறப்பு, இறப்புப் பதிவு அலுவலுக்குமான பதிவாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21-ம் திகதி கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. யாழ் மாவட்டப் பதிவாளரினுல் நடாத்தப்படவிருக்கும் மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு 33 விண்ணப்பதாரர்கள் அழைக்கப்பட்டிருக்கிறுர்கள்.

---

## வானொலி இன்று

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப் பாடல்கள்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமியநற்சிந்தனை
6-10 அறநெறிஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னேட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்கள்
7-00 தலையே நீ வணங்காய் நல்லூர் கந்தசுவாமி கோவில்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 நாதஸ்வரம்-நாமகிரிப் பேட்டை கிருஸ்ணன்
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-35 காலை ஒலிபரப்புமுடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 கோபுரதரிசனம்
6-45 உடல்நலம் சுகாதார திணைக்களம் வழங்கும் நிகழ்ச்சி
7-00 களத்துமேடு

இரவு
7-15 இல்லறஜோதி
7-30 உலகக் செய்திகள்
7-40 நாட்டுப்பாடல் பொதுபோக்கு
7-45 மெல்லிசைப் பாடல்
8-00 முஸ்லிம் நிகழ்ச்சி
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள்- வாத்தியஇசை
9-30 பேச்சு கேலிச்சித்திரங்கள்- அன்புமணி
9-45 கதாப்பிரசங்கம் என். பரமசாமி
10-15 வயலின் எம். எஸ். கோபாலகிருஷ்ணன்
11-00 ஒலிபரப்பு முடிவு

PHOTO STAT

ஹோம் பிறுன்ஸ் கொம்பனியின்

மற்றுமொரு சேவை

தெளிவான பிரதிகளுக்கும்

பெரிதுபடுத்தல், சிறிதுபடுத்தலுக்கும்
(ENLARGEMENT, REDUCTION)

ஹோம் கொப்பியேஸ்
(HOME COPIERS)

போட்டோ ஸ்டாட்டை நாடுங்கள்.

கன்னதிட்டி சந்தி, கஸ்தூரியார் வீதி

ஹோம் பிறுன்ஸ் கொம்பனி

82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24310

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

2 முதல் 4 வரை
**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30.
எம். ஜி. ஆர் கே. ஆர். விஜயா
**நல்லநேரம்**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்-மஞ்சுளா
**உலகம் சுற்றும் வாலிபன்**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 4-15, 7-00
Sean Connery in
DIAMONDS ARE FOREVER
(007)
(Color)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர் — நிர்மலா
**அன்புச் சகோதரர்கள்**
4-8-84 முதல்
எம்.ஜி.ஆர் -சரோஜாதேவி
**பெற்றால்தான் பிள்ளையா**


## நிர்வாகிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மடத்துவெளி சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப்பின்வருவோர்ஏகமனதாக தெரிவாகினர்.

தலைவர்:- இ.கு லசேகரம் பிள்ளை உப. தலைவர்:- மா. தனபாலன் செயலாளர்:- பொன். அமிர்லலிங்கம் பொருளாளர்:- தி. கருணகரன் உப. செயலாளர்:- பி. கனகலிங்கம் நிர்வாக உறுப்பினர்கள்:- து. ரவீந்திரன், வி. பகீரதன், மு. முத்துக்குமார், ந. தர்மபாலன் சி. திருச்செல்வம்.


**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-30
எம். ஜி. ஆர். -சாவித்திரி
வீரப்பா - சந்திரபாபு
**மகாதேவி**
(புத்தம் புதிய பிரதி)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30 2-30, 6-30
கமலஹாசன்- ஸ்ரீதேவி
**16 வயதினிலே**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
ரஜனி-ஜெய்சங்கர்-ரதி
**முரட்டுக்காளை**
(கலர்)

Now Showing
**ரீகல்** (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
RAQUEL WELCH
**HANNIE CAULDER**
Action-Adults
Cowboy Film
தன்னைக் கெடுத்தவர்களையும், தன் குடும்பத்தை அழித்தவர்களையும், தனித்து நின்று பழிவாங்கும் ஒரு பெண்ணின் வீர காவியம்.


மாலை

5-30 நாட்டுவளம் [சிங்களம்]
5-35 இசை நிகழ்ச்சி [சிங்களம்]
6-00 விளையாட்டுப் பயிற்சி [தமிழ்]
6-15 'பிளாஷ் கோர்டன்' கார்ட்டூன் சித்திரம் [ஆங்கிலம்]
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 தகவல் நிகழ்ச்சி [சிங்களம்]
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 இசை நிகழ்ச்சி [ஆங்கிலம்]
9-00 'பிறீவ் என்கவுன்டர்' ரிச்சாட் பேர்ட்டன் ஸோபியா லோரன்ஸ் நடித்த திரைப்படம் [ஆங்கிலம்]
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு

## கோட்டை முனை பொதுநூல் நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபையினால் கோட்டைமுனை பகுதியில் சுமார் 8லட்சம் ரூபா செலவில் அமையவிருக்கும் பொதுநூல் நிலையத்திற்கான அத்திவாரக்கல்லை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு.செ.இராசதுரை 9ம்திகதி நாட்டுவார்.

கோட்டை முனை பகுதி வரியிறுபாாளர்களின் நீண்டகால கோரிக்கைக்கிணங்க அரசடிச்சந்தியில் அமைக்கப்படவுள்ள இந் நூல் நிலையத்திற்கான செலவுகளில் 5லட்சம் ரூபா மாநகர சபை செலவு செய்யும் மிகுதி நிதி அமைச்சரால் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

## உதைபந்தாட்டம் அரை இறுதி ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் 'பி' பிரிவு அரை இறுதியாட்டம் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

நாளைய போட்டியில் குருநகர் புனிதவளன் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகம் மோதும். ஞாயிற்றுக்கிழமைப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் மோதும்.

இப்போட்டிகள் யாவும் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெறும். (வி)

## அடிக்கல் நாட்டு வைபவம்

[ஊரெழு]

குப்பிளான் வீரமனை கன்னிமார் அம்பாள் ஆலயத்தில் புனருத்தாரண வேலைகள் மேற்கொண்டிருப்பதனால் புதிய மூலஸ்தான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுமுன் தினம் சிறப்பாக நடைபெற்றது, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாகுட்டி மூலஸ்தான அடிக்கல்லை நாட்டிவைத்தார். திரு. பொ. நடராஜா தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் ஆசிரியர் திரு. செ. நடராஜா, திரு. கா. நல்லையா, திரு. செ, அப்புத்துரை ஆகியோரும் சிறப்புரை வழங்கினார்கள். ஆலயத்தில் புனருத்தாரண வேலைகளுக்கான நிதியுதவியை பொதுமக்களே வழங்கி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய நிர்வாகிகள்

(ஊரெழு)

உடுப்பிட்டி கம்பர் மலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்,

காப்பாளர்கள்: திருவாளர்கள் வ. கிருஷ்ணபிள்ளை சி. நாகமுத்து, அ. வீரசிங்கம்.

தலைவர்; திரு கி மகேஸ்வரன் 'உபதலைவர்; திரு. மு, தம்பையா' செயலாளர்: திரு. ஏ எம். துளசிதாஸ், உபசெயலார் திரு. அ. பாலேந்திரன், பொருளாள திரு. ஏ. எஸ். கிருஷ்ணன்' கணக்குப் பரிசோதகர்: திரு. வே. ரவீந்திரன்.

ஏழு உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு வொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## முதலிடம் பெற்றார்



[யாழ்ப்பாணம்]

யாழ். மண்டதீவு மகா வித்தியாலத்தைச் சேர்ந்த செல்வி பொ. அன்ரனி சம்மா அன்மையில் வேலணை வட்டார விளையாட்டுப் போட்டியில் 200 மீற்றர், 400மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாவதாக வெற்றியீட்டினார். பின்னர் கடந்த மாதம் 4ம் 5ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட விளையாட்டுப் போட்டியிலும் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். இவர் அகில இலங்கைப் போட்டிக்கும்தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (சூ)

## நியமனம்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை அராலி உப அலுவலகத்திற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக திரு. கா. சற்குணனந்தன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## புத்தகங்கள் அன்பளிப்பு

(சுண்டிக்குளி)

ஆசிய மன்ற நிறுவனம் பல ரூபா பெறுமதியான புத்தகங்களை யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை புலோலி வாசிகசாலைக்கு அன்பளிப்பு செய்துள்ளது.

இப்புத்தகங்களில் சட்டத்துறை, முகாமைத்துவம் என்பவையும் அடங்குகின்றன.

## இலவச வகுப்பறை

[கரவெட்டி]

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு, கரவெட்டியைச் சேர்ந்தஎன். நவரததினம் பதினேழாயிரம் ரூபா செலவில் வகுப்பறை ஒன்றை இலவசமாகக் கட்டிக் கொடுத்துள்ளார்.


**குறெஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்**

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

கொழும்பு சென்று பிரயாண ஒழுங்குகள் செய்ய வேண்டுமே என்ற கவலையே வேண்டாம்!

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானாலும் உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவு செய்துகொள்ள உடன் எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

குறிப்பு: பிரான்ஸ், இத்தாலி, செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

**Cross Travel Services(Pte) Ltd.**
PASSENGER SALES AGENT FOR SWISSAIR
Telephone: No: 22040, 22065.
TELEX No. 22207 (C. T. S) C E
**CTS**

எமது ஸ்தாபனத்தின் இணைந்த சேவையாக தற்பொழுது "குறெஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை" ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

★ வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? உங்கள் இல்லங்களிலுள்ள தொலைபேசியிலேயே உறவாடி மகிழ்ந்திட எம்மை நாடுங்கள்..
★ உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், டெலெக்ஸ் சேவையையும் ஒரு நொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

**Cross International Telecommunication Services**
(குளிரூட்டப்பட்டது–பஸ்நிலையம் முன்பாகவுள்ள மேல்மாடி)
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C. T. S.) CE



ஆங்கில, கணித, விஞ்ஞான, சாதாரண
உதவி ஆசிரியர் தெரிவுக்குரிய
**பயிற்சி வகுப்புகள்**
பாடநெறி: ★ ஆங்கிலம்
**திரு. T. N. பஞ்சாட்சரம்**
பொது அறிவும் பொது உளச்சார்பும்
(பல ஆசிரியர்களின் இணைந்த சேவை)
ஆரம்பம்: 6–8–84
கட்டணம்: ரூபா 190/- (முழுப்பயிற்சிக்கும்)
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
தபால் மூலம் பாடநெறிகளைப் பெற விரும்புவோர் ASTAN INSTITUTE, JAFFNA என்ற விலாசத்திற்கு ரூபா 60/- காசுக்கட்டளையை அனுப்பி பதிவுத்தபாலில் பெற்றுக்கொள்ளலாம்.
**ASTAN INSTITUTE**
166/1, HOSPITAL ROAD. JAFFNA.

## விஞத்தாளில் இப்படி ஒரு தவறு?

(யாழ்ப்பாணம்)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க. பொ. த. உயர்தர பரீட்சையில் தமிழ்மொழிக்கான பாட விஞத்தாளில் தவறு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தமிழ்மொழி விஞத்தாள் இரண்டில் கட்டுரை விஞவில் 35 க்கும் 40 க்கும் இடைப்பட்ட சொற்களில் விடைதரும்படி கேட்கப்பட்டிருந்ததாம். வழக்கமாக 359—400 சொற்களில் கட்டுரையை எழுதுமாறே கேட்கப்படுவது வழக்கம்.

பரீட்சை நிலையங்களுக்கு இத்தவறு பற்றி எதுவித அறிவுறுத்தலும் வராததால் சில மாணவர்கள் கேள்வி கேட்கப்பட்டவாறே விடையளித்துள்ளதாகவும் தெரிகிறது.

விஞவில் தவறு ஏற்பட்டால் அந்த விஞவிற்கு சகலருக்கும் முழுப்புள்ளி வழங்குவதே நடைமுறையாக இருந்துவருவதாக தெரிகிறது.

## சிரமதானம் மூலம் வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் வீதி சிரமதான மூலம் திருத்தியமைப்பதற்கானவேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுமார் 5 மைல் நீளமான இப்பிரதான வீதியின் ஒரு பகுதி சுமார் 50 பொதுமக்களால் செப்பனிடப்பட்டுள்ளது.

உரும்பராய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்க உறுப்பினர்களும், பொதுமக்களும் தொண்டர்களும் சேர்ந்து இச்சிரமதான வேலையில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஒவ்வொருவார இறுதியிலும் பகுதிபகுதியாக மேற்படி வீதியைச் சிரமதான மூலம் செய்து முடிப்பதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வாகனங்கள் பிரயாணம் செய்ய முடியாத நிலையில் இருந்த இந்த வீதியை திருத்தம் செய்து தருமாறு மாவட்ட அபிவிருத்தி சபையிடம் தெரியப்படுத்தியிருந்தபோதிலும், இதுவரை எது வித நடவடிக்கையும் எடுக்காததைத் தொடர்ந்து இப்பகுதி கி.மு. சங்கமும் பொதுமக்களும் சிரமதானம் மூலம் செய்வதென தீர்மானித்திருந்தனர். (மா)

## வெங்கட்ராமன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளாராக நிறுத்தப்படவுள்ளார்.

இவரை தி. மு. க. பாரதீய ஜனதாகட்சி, இந்திய கம்யூனிஸ்ட்கட்சி. மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி. ஜனதா, லோக்தல் ஆகிய கட்சிகள் ஆதரிக்கின்றன.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கு கடைசி நாள் இன்றாகும். தேர்தல்இம்மாதம் 22-ம் திகதி நடைபெறும். (சூ-வெ)

## கடற்கரைஓரங்களில் வீடு கட்ட அனுமதிபெறவேண்டும்

[சித்தன்கேணி]

கடற்கரை ஓரங்களிலிருந்து ஒரு மைல் சுற்றுடலில் உள்ள கிராமங்களில் புதிதாகக் கட்டிடங்களை அமைப்பதற்கு அவ்வப்பகுதி யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகங்களில் அனுமதி பெறவேண்டும்.

நகர அபிவிருத்திச் சபை கட்டளைச்சட்டத்தின்கீழ் உள்ளூராட்சி வீடமைப்பு நிமாணத்துறை அமைச்சினுல் நாடெங்கிலுமுள்ள அபிவிருத்திச்சபை உபஅலுவலகங்களுக்கு இதற்கான சுற்று நிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## தீர்ப்பு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களை அடையாள அணிவகுப்புக்குட்படுத்துவதற்குத் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபம் தொடர்பாகத் தீர்ப்பு வழங்குவது, இம்மாதம் 6ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள மூன்று இளைஞர்களுககு அடையாள அணிவகுப்பு நடத்தவேண்டும் என்று யாழ் நீதிமன்ற நீதவான் எஸ். நாகராஜா முன்னிலையில் பொலிசார் விண்ணப்பித்திருந்தனர்.

இதனைத்தொடர்ந்து ஆட்சேபம் தொடர்பான மனு நேற்று நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது நீதவான் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 6-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (மா)

## யாருடையது

செல்வி குலசிங்கம் சுதீத்திரா என்பவரின் அடையாள அட்டையையும், சிறிது பணத்துடன் அவரது பேர்ஸினையும் திரு. கே.ஜெயபாலன் என்பரும், திரு சந்தியாகு மநசிலன் யோசேப்பு என்பனரின் சாரதி லைசென்ஸ் புத்தகம், காசேலைப் புத்தகம், மற்றும் சில தஸ்தாக்களை வேஜூ திரு. சிவகுருநாதனும் ஹொண்டா சையிக்கிள் திறப்பினை திரு. ரி. கேதீஸ்வரனும், பண்டத்தரிப்புதிரு. நாகலிங்கம் சண்முகநாதனின் அடையாள அட்டையை திரு. சபா. ஜெகநாதனும், வண்ணார்பண்ணை கிழக்கைச் சேர்ந்த திரு. அருமைநாயகம் பாஸ்கரன் என்பவரின் அடையாள அட்டையை திரு. சண்முகராசாவும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

## புதிய நியமன...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தரப்படுகிறது.

**இசை ஆசிரியர்கள்**

**ப்துளை மாவட்டம்:**

செல்வி வி. பி. முத்துசாமி (காங்கேசன் துறை) திருமதி டி. சிவ ஞானசீலன் (சாவகச்சேரி) செல்விஎன். எம். ஜேம்ஸ் (யாழ்ப்பாணம்) செல்வி ஐ. ராகினிதேவி (யாழ்ப்பாணம்) செல்வி சி. ராஜசிங்கம் (யாழ்ப்பாணம்).

**நுவரெலியா மாவட்டம்**

செல்வி எஸ். லோகினி (மானிப்பாய்) திரு எஸ். வரதராஜன் (தெல்லிப்பளை) செல்வி கே. சிவரூபி (அளவெட்டி) செல்வி ரி. ரஞ்சனுதேவி (அச்சுவேலி) செல்வி எஸ். லேகா (இணுவில்) திருமதி ஜே. விஜயலட்சுமி (ஓமந்தை) செல்வி ஜி. மாணிக்கவல்லி (கொக்குவில்) செல்வி ஆர். குகணேஸ்வரி (வல்வெட்டித்துறை) செல்வி ரி. கமலராணி (தெல்லிப்பளை) திருமதி ஜே. விக்னேஸ்வரன் (மீசாலை)

**நடன ஆசிரியர்கள்**

செல்வி ரி. குகாநந்தினி (வட்டுக்கோட்டை) செல்வி ரி. ராமலட்சுமி (தெல்லிப்பளை) செல்வி எஸ். அனுஷாதேவி (வல்வெட்டித்துறை] செல்வி என். புபாஜினி (யாழ்ப்பாணம்) செல்வி எஸ். சுமதி (தெல்லிப்பளை) செல்வி சி. தர்மதேவி உரும்பராய்), செல்வி என் அரசரத்தினம் (யாழ்ப்பாணம்), செல்வி பி. மேனகா (யாழ்ப்பாணம்), செல்வி எஸ். மகாதேவன் (தெல்லிப்பளை), செல்வி கே. கண்ணமூர்த்தி (யாழ்ப்பாணம்), செல்வி பி. சுமலாம்பிகை (யாழ்ப்பாணம்) திருமதி ஜி. பகிர்நாதன் (கொக்குவில்), செல்வி ஷர்மினி ராசதுரை (உரும்பராய்), செல்வி என். கனகசபாபதி (சாவகச்சேரி), செல்வி தயாபனி ஜோர்ஜ் (யாழ்ப்பாணம்) செல்வி ராஜரஞ்சினி ராஜரத்தினம் (யாழ்ப்பாணம்). திரு பி. வின்சன்ட் (யாழ்ப்பாணம்) செல்விரி. கந்தையா (கொழும்பு செல்வி பி. சதீசானந்தசிவம் (கொழும்பு) செல்வி ஐ. மகேஸ்வரன் (திருகோணமலை) செல்வி எஸ். நந்தினி (மட்டக்களப்பு) செல்வி கே. சிறிசிவராணி (உடுப்பிட்டி) செல்வி கே. சிவகுரு (பூநகரி) செல்வி ரி. இரத்தினசிங்கம் (கல்முனை) செல்வி வி. சபாநந்தன் (கல்முனை).

## கடல் கண்கா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்ணண்டோ ஆகியோரும் இவ்வைபவங்களில் கலந்து கொண்டனர்.

இதேவேளை திருகோணமலை நகரில் கடந்த புதன்கிழமை மாலை இராணுவத்தினரின் சோதனைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. நகரின் முக்கிய சந்திகளில் வாகனங்களும் தனிநபர்களும் கடும் சோதனைக்குள்ளானுர்கள். (கி)

## நல்லூர் உற்சவம் ஆரம்பம்

(யாழ்பாணம்)

நல்லூர்க் கந்தசாமிகோவில் வருடாந்த உற்சவம் நேற்றுக் காலை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது.

25 நாள் திருவிழாக் காலங்களிலும் இம்முறை வெளி வீதி உற்சவம் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பிற்பகல் 5மணிக்கு சுவாமி வெளிவீதி வலம் புறப்பட்டு 5-30க்கு எழுந்தருளி மண்டபத்தைச் சென்றடையும்.

கடந்தவருடம் திருவிழா உற்சவ காலத்தில் நாட்டு நிலைமை குறித்து, சுவாமி உள்வீதி வலம் சுற்றியது தெரிந்ததே. (மா)

## இப்படியும் நடக்கிறது

அண்மையில் தலைநகரில், நேர்முகப் பரீட்சையொன்று நடந்தது.

நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த பல இளைஞர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினர்.

கூட்டுத்தாபனமொன்றில் காலியாகவுள்ள ஒரு பதவிக்கு நடைபெற்ற மேற்படி பரீட்சையில் மூவர் நீதிபதிகளாகக் கடமையாற்றினர்.

அந்த இளைஞர் தமது 'பைலு' டன், நீதிபதிகள் முன்பாக நின்ருர். பல 'சேர்ட்டுபிக்கேட்டுகளும் கைமாறின.

நீதிபதிகளில் ஒருவர்:... ''ஓ நீர் 'ஈழநாடு' பத்திரிகையிலும் கடமையாற்றியிருக்கிறீர். ''ஈழநாடு'' யாழ்ப்பாணத்திலிருந்துதானே வருகிறது...? அது தடை செய்யப்பட்டு விட்டதல்லவா...?''

நீதிபதிகளில் மற்றவர்; ''இல்லை...இல்லை... 'ஈழநாடு' ஒரு தேசிய பத்திரிகை. யாழ்ப்பாணத்திலிருந்து நீண்டகாலமாக வருகிறது, நீங்கள் கூறுவது ஒரு ஆங்கிலப் பத்திரிகை பற்றியது...''

உங்கள் காதுகளுக்கு மட்டும்: அந்த இளைஞரை முதலில் விசாரித்த 'ஒருவர்' யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவரது கேள்வியின் சந்தேகத்தைத் தீர்த்த 'மற்றவர்' ஒரு சிங்களப் பெண்மணி!

- ஊடுருவி

### கடலில் கண்டெடுக்கப்பட்ட விநாயகர்சிலை

## கோணேஸ்வரர் ஆலயத்தில் ஒப்படைக்கப்படும்

(கொழும்பு)

திருகோணமலை கோணேஸ்வரர் கடலில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட மிகப்புராதன காலத்தைச் சேர்ந்த விநாயகர் சிலையை தொல் பொருளாராய்ச்சித் திணைக்களத்திடமிருந்து பெற்று, கோணேஸ்வரர் ஆலயத்திற்கு வழங்க ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இந்த விநாயகர்சிலை தொடர்பாக அமைச்சர் செ. இராசதுரை நேற்று ஜனதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோது விநாயகர் சிலையை கோணேஸ்வரர் ஆலயத்தில் ஒப்படைக்குமாறு அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இந்தச்சிலை தற்போதுதொல்பொருளாராய்ச்சி திணைக்களத்திடமுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கடத்தல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் குண்டு வெடிப்பு இடம் பெற்றது. இதனுல் விமானமோட்டியின் அறை சேதமடைந்ததாக கூறப்பட்டது.

கடத்தல் காரர்கள் சரணடைவதற்கு முன்னர் விமான நிலையத்திலிருந்து 20ு கிலோ மீட்டர் தூரத்தில் பிரயாணிகளையும், விமானச் சிப்பந்திகளையும் நிலத்தில் படுக்க வைத்த பின்னரே இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## தினேஷ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டிருக்கும் தினேஷ் இப்பொழுதுஉயிருடன் போராடிக் கொண்டிருக்கிறுன்.

இம்மாணவனின் உயிர் பிழைக்கவேண்டுமானுல் சில தினங்களுக்குள் மாற்று சிறுநீரகம் பொருத்தப்படவேண்டும் என்று, இம்மாணவனின் நலனைக் கவனித்துவரும் கொழும்பு பெரியாஸ்பத்திரி டாக்டர் எஸ். இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மாற்றுச் சிறுநீரகம் இலங்கையில் உடனடியாக பெறுவது கஷ்டமாக இருப்பதனுல் தமிழ்நாட்டில் வேலூர் கிறிஸ்தவ மருத்துவ மனையில் மேற்படி சத்திர சிகிச்சையை மேற்கொள்ளலாம் என்றும் 4, 5 தினங்களில் தினேஷ் அங்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றும் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்துள்ளனர்.

யாழ்ப்பாண மாணவன் தினேஷின் உயிரைக் காப்பாற்ற பெரும் உள்ளம் கொண்ட வர்த்தகப் பிரமுகர்களும், சமூக சேவை ஸ்தாபனங்களும் உடனடியாக முன்வருமா?

## உலக பௌத்த மகாநாடு

(கொழும்பு)

உலகபௌத்தமகாநாட்டை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைத்தார்.

இம்மகாநாட்டில் 34 நாடுகளைச் சேர்ந்த 380க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இம்மகாநாடு இம்மாதம் 7ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## சந்தேகநபர் பிணையில்செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவைச் சேர்ந்த காத்திகேசு பசுபதி என்பவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பசுபதி அகிலகுமார் என்பவர் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் நேற்று இச்சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதி வழங்கினுர்.

சட்டத்தரணி செல்வி. சத்தியபாமா அமிர்தானந்தம் இச்சந்தேகநபர் சார்பில் ஆஜராஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனவரிமாதம் 23ந் திகதியன்று புங்குடுதீவைச் சேர்ந்த கார்த்திகேசு பசுபதி என்பவரைக் கொலைசெய்த குற்றச்சாட்டுத் தொடர்பாக இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (கி)